



The Trumpet of the Seventh Angel

# ஏழாம் தூதனின் எக்காளம்

1879-1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 12, இதழ் - 1 ஜனவரி - பிப்ரவரி 2026

R4881

## LOYALTY THE GREAT TEST
## விசுவாசம் மாபெரும் பரீட்சை

ஆயிரம் வருட யுக முடிவில் மானிடர்கள் பூரணராக்கப்படும் போது, உலகத்தின் மனுக்குலம் ஒரு இறுதியான சோதனைக்கு உட்படுத்தப்படும், மானிட சுபாவத்தின் பூரணத்தில் அல்ல, தேவனிடத்திலும் அவர்களது விசுவாசத்தைப் பற்றிய சோதனை. தாயாகிய ஏவாள் மீது வந்த சோதனை இந்த குணலட்சணத்தை பற்றியதாக இருந்தது. தேவனிடத்தில் விசுவாசம் அல்லது கீழ்ப்படியாமையை எது அமைக்கிறது என்பதை அறியாததினால் ஏவாள் வஞ்சிக்கப்படவில்லை. தேவன் முன்னரே அவளை எச்சரித்திருந்தார். எது சரி என்பதை அறிந்திருந்தாள். விளைவுகளை பொருத்தே அவர் வஞ்சிக்கப்பட்டாள். சாத்தானும் அதே போல் தான். தேவனுக்கு எதிராக தன்னுடைய திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்ற எண்ணத்தில் அவனுடைய வழியின் விளைவினால் வஞ்சிக்கப்பட்டான்.

ஆகையால் ஆயிரம் வருட யுக முடிவிலும் அது இருக்கும் என்று நம்புகிறோம். மனுக்குலத்தில் சிலர் அவர்கள் எடுக்கும் வழியின் பலனால் வஞ்சிக்கப்படுவார்கள். தெய்வீக பிரமாணத்திற்கு முழுவதுமாக விசுவாசமாய் இருக்கிற அனைவரும் பொல்லாங்கனின் வஞ்சகத்தை உணருவார்கள். ஆயிர வருட யுகத்தில் கிறிஸ்து, மத்தியஸ்தராக மனுக்குலத்திற்கும் நீதியின் முழு தேவைக்கும் இடையே நிற்பார். மனுக்குலமானது முன்னிருந்ததைப் போல பாதுகாப்பான வீட்டில் இருப்பார்கள். சகல தீய செல்வாக்குகளும் கட்டுப்படுத்தப்படும் போது மனுக்குலமானது தெய்வீக தேவையின் முழு அறிவுக்கு வரக்கூடிய மிகவும் சாதகமான சந்தர்ப்பத்தை பெறும். அவர்கள் இளைப்பாறுதலின் காலங்களின் ஆசீர்வாதங்களை முழுமையாக அனுபவித்த பிறகு ஒரு பரீட்சை வருவது சரியானதாக இருக்கும். அதாவது அவர்கள் நீதியை வெறும் கொள்கைக்காக கடைப்பிடிக்கிறார்களா அல்லது அவர்கள் தேவனுக்கும் நீதிக்கும் இதய பூர்வமான விசுவாசத்தையும், எந்த செல்வாக்கும் நீதியிலிருந்து நகர்த்த முடியாத நிலைமையை அடைந்திருக்கிறார்களா என்பதையும் சோதிப்பதற்காக ஆகும்.

ஆயிரம் வருட யுக முடிவில், அவர்கள் தேவனிடம் திரும்பிய பிறகு, அவர் அவர்கள் முழுமையான கீழ்ப்படிதலை கற்றுக்கொண்டிருக்கிறார்களா என்பதை தெரிந்து கொள்ள மனுக்குலத்தை இப்படியாக சோதிப்பார். கொஞ்ச காலம் பொல்லாங்கன் விடுவிக்கப்படுவான். அவர்கள் கீழ்ப்படிதலின் பாடத்தை முழுமையாக கற்றுக் கொண்டிருக்காவிட்டால், அவர்கள் நித்திய ஜீவனுக்கு அபாத்திரர் என்பதையும் அவர்கள் வெறும் கடமைக்காக ஊழியம் செய்திருக்கிறார்கள் என்பதையும் விளங்கப் பண்ணுவார்கள். ஏனெனில் அவர்கள் தேவனுடன் நிறைவான இருதய இணக்கத்திற்கு வரவில்லை. அதாவது அவர்களது விசுவாசத்தைக் குறித்த இந்த பரீட்சையில் அவர்கள் சுலபமாக பாதிப்படையக்கூடிய நிலைமையில் இருப்பார்கள்.

### தேவனுடனான விசுவாசத்திற்காக அனைவரும் சோதிக்கப்பட வேண்டும்

சாத்தான், தேவனிடத்தில் அவனுடைய விசுவாசத்திற்காக சோதிக்கப்பட்டான். ஆதாமும் ஏவாளும் தேவனிடத்தில் அவர்களுக்கான விசுவாசத்திற்காக சோதிக்கப்பட்டார்கள். நோவா காலத்தில் தேவ தூதர்கள் அவர்களது முழுமையான விசுவாசத்திற்காக சோதிக்கப்பட்டார்கள். இயேசுவும் கூட பிதாவினிடத்தில் அவரது விசுவாசத்திற்காக சோதிக்கப்பட்டார். ஆகையால் மனக்குலமும் ஆயிரம் வருட யுகத்தின் முடிவில் தேவனுடனான இருதய பூர்வமான நல்லிணக்கத்திற்காக சோதிக்கப்படுவார்கள்.

அவர்களது சோதனையின் வகையைக் குறித்து நமக்கு குறிப்பாக அறிவிக்கப்படவில்லை. ஒருவேளை அந்த சமயத்தில் மனுக்குலத்தின் மேல் சோதனை பூமிக்குரிய அரசாங்கத்தின் உரிமையை தங்களிடம் கொடுப்பதற்கு முன்னர் தாங்கள் அதை சொந்தமாக்கிக் கொள்ளும் விருப்பத்தில் இருக்கும். இது உண்மையாக இருந்தால், ஆயிரம் வருடம் முடியும் போது, பூமியெங்கும் பிரபுக்கள் ஆளுகை செய்யும் பழைய ஏற்பாட்டுக்கால பாத்திரவான்களின் கட்டுப்பாட்டிலிருந்து பூமியை தங்களது ஆளுகைக்கு உடனே மாற்றப்பட வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். (சங்கீதம் 45:16) காலம் முழுவதும் நிறைவேறும் போது அவர்கள் ஏமாற்றம் அடைவார்கள். "அவர்கள் பூமியெங்கும் பரவி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும் பிரியமான நகரத்தையும் வளைந்து கொண்டார்கள்." (வெளி.20:9)

இது அந்த காலத்தில் உலகத்தின் அநேகருடைய நிலைமையைக் காட்டுகின்றது. அவர்களில் அநேகர் அமைதியற்ற நிலைமையில் இருப்பார்கள். "இந்த பழைய ஏற்பாட்டுக்கால பாத்திரவான்கள் நம்மிடமிருந்து அரசாங்கத்தை பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கும் உலகத்தின் அரசாங்கத்திற்கும் இடையே எதுவும் நிற்பது எங்களுக்கு தேவையில்லாதது" என்ற இந்த மனோபாவம் தேவனிடத்தில் அவிசுவாசமாக இருக்கும். இவைகளெல்லாம் தேவனுடைய ஏற்பாடு என்பதை அறிய, "ஆயிரம் வருடங்கள் முடிவுற்றதாக தெரிகிறது. அந்த அரசாங்கம் நமக்கு கொடுக்கப்படும் என்று நினைத்தோம். ஆனால் காரியங்கள் அனைத்தையும் தேவனுடைய கையில் விட்டுவிடுவோம். இந்த அரசாங்கத்தை நம்மிடம் கொடுப்பது நல்லது என்று கண்டால் நல்லது. காலம் ஆனபிறகு அதை

தானே வைத்துக்கொள்ளுவது சிறந்தது என்று அவர் கண்டால், நாம் திருப்தியடைவோம்" என்று அவர்கள் சொல்லுவார்கள். இப்படிப்பட்டவர்களே விசுவாசத்தின் மனோபாவத்தை உடையவர்கள்.

இன்றைக்கும் அப்படியே இருக்க வேண்டும். ஒரே தேவனும் ஒரே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் உண்டு என்று அங்கீகரிப்பது நமது மனோபாவமாக இருக்க வேண்டும். அவர்களுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். ஏற்ற காலத்தில் தேவனுடைய ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமை முழுவதும் நிரூபிக்கப்படும். தேவன் அனுமதித்திருக்கிற அனைத்து காரியங்களில் அவைகள் முழுவதுமாக இணக்கமாக இருக்கும். இதை விசுவாசத்தின மூலமாக காணக்கூடியவர்கள் தங்களது இருதய பூர்வமான விசுவாசத்தை தேவனிடத்தில் நிரூபிக்கிறார்கள்.

R4882

# RIVER OF WATER OF LIFE
# ஜீவத்தண்ணீரின் ஆறு

எசேக்கியேல் 47:1-12

"விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாக வாங்கிக் கொள்ளக்கடவன்." வெளிப்படுத்தல் 22:17

இந்த பாடத்தில் கூட மேசியாவின் யுகத்தைப் பற்றிய ஒரு சித்திரத்தை எசேக்கியேல் மூலமாக தேவன் நமக்கு தருகிறதை நாம் காண்கிறோம். இது எழுநூறு வருடங்களுக்கு பிறகு கொடுக்கப்பட்டதற்கு ஒத்ததாக இருக்கிறது.

எருசலேம் மற்றும் தேவனுடைய ஆலயத்தின் ஜீவத்தண்ணீரின் ஆற்றுக்கு ஆரம்பமாக எசேக்கியேலின் சித்திரம் காண்பிக்கிறது. அதே போல் வெளிப்படுத்தலின் பதிவிலும் இருக்கிறது. ஆறு ஒரு சிற்றோடையிலிருந்து ஆரம்பித்து ஆழமாகி, அகலமாகி ஒரு பெரும் நதியாகிறதை எசேக்கியேல் காண்பிக்கிறார். அது போகுமிடமெல்லாம் ஜீவனை எடுத்துக்கொண்டு சவக்கடலை அடைகிறது என்று அவர் காண்பிக்கிறார்.

சவக்கடல் ஆரோக்கியமடைந்து, புதுப்பிக்கப்பட்டு உப்புத்தன்மை நீக்கப்பட்டு மீன்களால் நிறைந்திருக்கும் என்று அவர் காண்பிக்கிறார். இப்படிப்பட்ட எந்த ஆறும் எருசலேமில் உருவானதில்லை. அப்படிப்பட்ட நதி மலையின் உச்சியில் உருவாகி குறைந்த தூரத்தில் இப்படிப்பட்ட பரிமாணத்தை அடைந்ததில்லை.

இந்த விளக்கம் ஒரு பெரிய ஆவிக்குரிய சத்தியத்தை காண்பித்து வெளிப்படுத்தலின் சித்திரத்திற்கு முழுவதுமாக ஒத்திருக்கிறது. அது புத்துணர்ச்சி மற்றும் இளைப்பாறுதலின் ஆசீர்வாதங்களை அழகாகவும் பலமாகவும் குறிப்பிடுகிறது. புதிய எருசலேமாகிய மேசியாவின் ராஜ்யம் மனிதர்களிடையே ஸ்தாபிக்கப்படும் போது அது வழங்கப்படும் மேசியாவின் மகா வல்லமையான செல்வாக்கு படிப்படியாக சகல மனுக்குலத்திற்கும் ஆசீர்வாதங்களை விரிவுப்படுத்தும். சவக்கடலினால் குறிப்பிடப்படுகிற மூட நம்பிக்கையிலும் அறியாமையிலும் மூழ்கியிருக்கிற வகுப்பாருக்கும் கூட விரிவுப்படுத்தப்படும்.

புதிய எருசலேமாகிய சிங்காசனத்தின் கீழேயிருந்து பளிங்கைப் போன்ற தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி புறப்பட்டு வருகிறதை வெளிப்படுத்தலின் புத்தகம் காண்பிக்கிறது. அதன் இரு கரைகளிலும் உணவுக்கு சிறந்த கனிகளை தரக்கூடிய ஜீவ விருட்சங்கள் இருந்தன. எசேக்கியேல் இதே சித்திரத்தை மனதில் கொண்டிருக்கிறார். நதியின் இரு கரைகளிலும் அதே விருட்சங்கள் இருக்கும்; அவைகளின் இலைகள் உதிருவதுமில்லை. அவைகளின் கனிகள் கெடுவதுமில்லை. அவைகளுக்கு தண்ணீர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பாய்கிறபடியால் மாதந்தோறும் அவைகள் புதுக்கனிகளை கொடுத்துக்கொண்டேயிருக்கும் என்று அவர் கூறுகிறார். "அவைகளின் கனிகள் புசிப்புக்கும் அவைகளின் இலைகள் அமிழ்தத்துக்கும் பிரயோஜனமானவைகள்." இதே போல வெளிப்படுத்தின விசேஷத்திலும் "அதின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியம் அடைவதற்கு ஏதுவானவைகள், அதன் கனிகள் நித்திய ஜீவனை தக்கவைத்துக் கொள்ள ஏதுவானவைகள். தண்ணீர் அவர்களது புத்துணர்ச்சிக்கு ஏதுவானவைகள் என்று சொல்லுகிறது. பிறகு, ஆவியும் மணவாட்டியும் வா" என்று கூறி உலகலாவிய அழைப்பை கொடுக்கிறார்கள். விருப்பமுள்ளவன் வரக்கடவன். இந்த அழைப்பை கேட்கிறவனும், "வா, விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாக வாங்கிக் கொள்ளக்கடவன்" என்று கூறி மற்றவர்களையும் அழைப்பானாக.

### "ஜீவத்தண்ணீரின் ஆறு" இப்பொழுது இல்லை

இந்த அடையாளங்களை நாம் பயன்படுத்தும் போது அவைகள் தற்காலத்திற்கு அல்ல, எதிர்காலத்திற்கு என்று உறுதிப்படுத்துகிறோம். வெளிப்படுத்தின விசேஷத்தின் நதி இப்போது எங்கே இருக்கிறது? ஜீவ விருட்சகளும் அதின் இலைகள் ஆரோக்கியமாவதற்கு ஏதுவானவைகளாக எங்கே இருக்கின்றன? மாறாக, நமது கர்த்தருடைய வார்த்தைகள் கூறுவதாவது: "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்." வேறு வார்த்தைகளில் கூறுவோமானால், "ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகிய மணவாட்டியை" அமைக்கிற வகுப்பாரை அழைப்பதற்கு ஒரு தேர்வு முறை இருக்கிறது. "அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்த கனமான ஊழியத்துக்கு தானாய் ஏற்படுகிறதில்லை."

இந்த யுக முடிவில் தெரிந்தெடுத்தல் செயல்முறை முடிவுக்கு வரும். பிறகு தெய்வீக செய்தி, இலவசமான கிருபை ஆதாமின் சந்ததி ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பமும் சலுகையும் வரும். குருடரின் கண்கள் யாவும் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம். கர்த்தரின் மகிமையின் அறிவினால் பூமி நிறைந்திருக்கும். இனி ஒருவனும் தன் அயலானை நோக்கி, "கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை. ஏனெனில் அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும் கர்த்தரை அறிந்து கொள்வார்கள்." (எரேமியா 31:34)

### "வா" என்று மணவாட்டி சொல்ல வேண்டாம்

கிறிஸ்துவின் மணவாட்டியும் பரிசுத்த ஆவியும் வந்து, ஜீவத்தண்ணீரை இலவசமாய் பருகுங்கள் என்று ஒவ்வொரு சிருஷ்டியையும் அழைக்கிறார்கள் என்று வெளிப்படுத்தின விசேஷம் நமக்கு சொல்லுகிறது. மணவாட்டி உருவாகிறதற்கு

முன்னர் இந்த அழைப்பை எப்படி கொடுக்க முடியும்? தற்காலத்தில் மணவாட்டி இன்னும் வெளிப்படவில்லை. இந்த காலம் மணவாட்டி வகுப்பாரை அழைக்கும் காலமாக இருக்கிறது. தற்போது அழைக்கப்பட்டவர்கள் தங்கள் "அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தும்" காலமாக இருக்கிறது, புதிய யுகம் வரும்வரை "மணவாட்டி" இல்லை. மணவாட்டி என்ற பெயர் ஒரு கலியாணத்தை குறிக்கிறது. சபையானது முன்னரே கிறிஸ்துவுக்கென்று நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கலியாணமானது அவரது இரண்டாம் வருகையில் நடக்கும் என்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது. அப்பொழுது ஒரு மணவாட்டி இருக்கும். அதன்பிறகு அவளது கர்த்தருடன இணைந்து பரலோக புதிய எருசலேமில் ராஜரீக அதிகாரத்துடன் இருக்கும். பூமியின் பேரரசாகிய அந்த நகரத்திலிருந்து தேவனுடைய செய்தி படிப்படியாக ஆழமும் அகலமுமாகி மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கமும் அதன் ஜீவத்தண்ணீரின் ஆசீர்வாதங்களில் பங்கு பெறும் சந்தர்ப்பத்தை பெறுவார்கள்.

மனுக்குலத்திற்கு வரக்கூடிய இந்த மகிமையான சலுகைகளை நினைக்கும் போது அவை அனைத்தும் பூமிக்குரியது, இழந்து போனதை திரும்பப் பெறுவது என்பதை நாம் நினைவு கூருவோமாக. பூமிக்குரிய ஒளியும் மானிட பூரணமும், கீழ்ப்படிதலும் விருப்பமும் உள்ள மனுக்குலத்திற்கு பொதுவாக தேவன் அருளியவை ஆகும். கிறிஸ்துவின் மணவாட்டியின் அங்கமாகிறதற்கான அழைப்பு வரையறுக்கப்பட்ட ஒன்று. ஒரு குறிப்பிட்ட காலத்துக்குரியது. நாம் வேதத்தை புரிந்துகொண்டது சரியாக இருக்குமானால் இந்த விசேஷித்த சந்தர்ப்பத்தின் முடிவு அருகாமையில் இருக்கிறது. அதாவது மகிமையின் நிலைமைக்கு மாறுகிறதற்கான காலம் சமீபமாயிருக்கிறது. பூமியின் கோத்திரத்தார் அனைவரும் ஆசீர்வதிக்கப்படும் காலம் சமீபமாயிருக்கிறது.

தீர்க்கதரிசிகளாலும் நம்முடைய கர்த்தராலும் முன்னுரைக்கப்பட்ட வரவிருக்கின்ற இந்த ஆசீர்வாதத்தின் பாடலை பாடுவதில் நாமும் இணைந்து கொள்ளுவோம்.

"களிகூறு! களிகூறு! வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட
காலம் வருகிறது!
களிகூறு! களிகூறு! வானந்தரம் செழிக்கும்!
வனாந்தரம் அனைத்தும் செழிக்கும் என்று
சீயோன் பிள்ளைகள் சீக்கிரத்தில் பாடுவார்கள்.
களிகூறு! களிகூறு! வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட
காலம் வருகிறது!
களிகூறு! களிகூறு! வானந்தரம் செழிக்கும்!
சுவிசேஷ பதாகை, அகலமாக விரிக்கப்பட்டது
உலகத்தின் மேல் ஜெயத்தை நாம் கையசைப்போம்.
ஒவ்வொரு சிருஷ்டியும், அடிமையோ, சுயதீனரோ,
மகிமையான பலியை வரவேற்கும்!"

R4883

# PRAY ALWAYS
# எப்பொழுதும் ஜெபம் பண்ணுங்கள்

"இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்." 1 தெசலோனிக்கேயர் 5:17

"ஜெபம் என்பது சொல்லப்பட்ட அல்லது சொல்லப்படாத ஆத்துமாவின் உண்மையான விருப்பம்" என்று யாரோ ஒருவர் குறிப்பிட்டதற்கு நமது வசனம் மிகவும் ஆச்சரியமாக பொருந்துகிறதாக காணப்படுகிறது. இது சரியான ஒரு விளக்கமாக இருக்கிறது. ஏனெனில் சில சமயங்களில் சொல்ல முடியாத மன வேதனையுடன் நாம் ஜெபிக்கிறோம்.

நன்றி கூறுவது என்பது ஒரு வகையான ஜெபமாக, ஜெபத்தின் ஒரு அம்சமாக, நமக்கு மிகவும் பொருத்தமானதாக இருக்கிறது, எனினும் வேத வாக்கியங்களானது ஜெபம், போற்றுதல் மற்றும் நன்றி கூறுதல் ஆகியவற்றை வேறுபடுத்தி காண்பிக்கின்றன; மேலும் தேவனுடனான ஐக்கியம், தொழுகையின் பல்வேறு அம்சங்களை குறிப்பிட்டு இந்த வார்த்தைகளை அதே இணைப்பில் பயன்படுத்துகின்றன. நமது ஜெபங்களில் நன்றி கூறுதலை சேர்க்கும் போது மன்றாட்டு என்ற அர்த்தத்தில் நமது விளக்கம் கூட பொருந்துகிறது. சொல்லப்பட்டதோ அல்லது சொல்லப்படவில்லையோ, ஜெபம் என்பது ஆத்துமாவின் உண்மையான விருப்பம். ஜெபமானது ஆத்துமாவின் உண்மையான விருப்பமாக இல்லாதிருந்தால் அது ஏற்றுக்கொள்ளப்படாததாக இருக்கும். தேவனுக்கு நமது நன்றியை எப்படி செலுத்துவது என்பதை நாம் அறியாமலிருக்கலாம். ஆனால் கர்த்தர் நமது எண்ணங்களை அறிந்தவராயிருக்கிறார் மற்றும் நமது பலவீனமான வெளிப்பாடுகளை ஏற்றுக்கொள்ள விருப்பமுடையவராக இருக்கிறார் என்பதை நினைவுகூருவது ஆறுதலாக இருக்கிறது.

தேவனிடத்தில் வருகிற அனைவரும் அவர்களது தேவைகளையும் தேவனுடைய தயார் நிலை, விருப்பம், தேவையானவைகளை வழங்கக்கூடிய திறனையும் முதலாவது உணர்ந்திருக்க வேண்டும். நமக்கு இளைப்பாறுதலும், சமாதானம் மற்றும் நித்திய ஜீவனும் தேவை. இவைகளை உலகில் நம்மைச் சுற்றி காண இயலாது. தேவன் வழங்காமல் வெளியில் உண்மையான சமாதானம் இல்லை. "என்னுடைய சமாதானத்தையே உங்களுக்கு கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நாம் உங்களுக்கு கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக." (யோவான் 14:27) தேவன் தம்முடைய ஜனங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறவைகளை கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை.

ஆகையால் ஆவியின் ஊக்கத்தை பெற்றிருக்கிறவர்கள் விரும்புவதற்கும், எதிர்பார்ப்பதற்கும் ஜெபிப்பதற்கும் சில காரியங்கள் இருக்கின்றன. ஆகையால் நாம், உம்முடைய ராஜ்யம் வருவதாக என்று ஜெபிக்கிறோம். அதாவது தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற ஆசீர்வாதங்கள் நிறைவேறுவதாக என்றும் உலகத்திற்கானவைகள் மாத்திரமல்ல, சபைக்கானவைகளும் நிறைவேற வேண்டும் என்றும் ஜெபிக்கிறோம்.

### நாம் மன்னிக்கிறது போல நமது பாவமன்னிப்புக்காக ஜெபிக்க வேண்டும்

கிறிஸ்தவன் உலகத்தின் ஊடாக செல்வதால் பல்வேறு காரியங்கள் அவனது இருதயத்தை திசைதிருப்புவதை அவன் காண்கிறான். தேவன் சமாதானத்தை வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறவைகளை அவன் காண்கிறபடியால், அவன் அந்த சமாதானத்தை எதிர்பார்க்க வேண்டும். நமக்கு தேவையானவைகள் என்று நினைக்கிற காரியங்களுக்காக தேவனிடம் நாம் ஜெபிக்க வேண்டும். ஆனால் நாம் அவரது வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அவரது ஞானத்தை நாம் நமது வழிகாட்டியாக எடுத்துக்கொள்ள வேண்டும். நாம் ஓர் அளவுக்கு சமாதானத்தையும் ஆசீர்வாதத்தையும் பெற்றிருந்தால் இன்னும் சந்தோஷத்தின் நிறைவுக்காக ஜெபிக்க வேண்டும். நாம் கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினால் ஆதி பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்டிருந்தாலும் நாம் அனுதினமும் மீறுகிறவர்களாயிருக்கிறோம் என்பதை நினைவுகூர வேண்டும். “எங்கள் பாவங்களை மன்னியும்” என்று அனுதினமும் ஜெபிக்க வேண்டும். இந்த வேண்டுதலுக்கு நமது கர்த்தர் ஒரு நிபந்தனையுடன் பதிலளிக்கிறார். அதாவது மற்றவர்கள் நமக்கு விரோதமாக செய்யும் பாவத்தை நாம் மன்னித்தால் அவரும் நமது பாவத்தை மன்னிப்பார். ஆகையால் கிறிஸ்தவன் தனது வாழ்க்கையின் சகல காரியங்களுக்காக ஜெபிக்கும்போது நிபந்தனைகளைக் காண்கிறான்.

எனினும் கிறிஸ்தவன் தனது வேலையை தன்னால் செய்ய இயலாது என்று முடிவுக்கு வரக்கூடாது. வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்திலும் ஒவ்வொரு குழப்பத்திலும் கர்த்தருடைய ஆசீர்வாதங்களுக்காகவும், அனுதின தேவைகளுக்காகவும் ஜெபத்தின் ஆவி அவனுடன் இருக்க வேண்டும்; ஏனெனில் நாம் கர்த்தருடையவர்கள். இடைவிடாமல் ஜெபம் பண்ணுவது நமது வாழ்க்கையின் முறையாக இருக்க வேண்டும். அவருடைய ராஜ்யம் வரவேண்டும் என்று ஜெபிப்பதை ஒருதடவை நாம் கேட்டுவிட்டோம் என்பதால் நாம் நிறுத்திவிடக்கூடாது. அனுதின உணவுக்காக ஜெபிப்பதையும் நாம் நிறுத்திவிடக்கூடாது. “நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி, ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை” என்பதை உணர்ந்து கொள்ளுகிறோம். (யாக்கோபு 1:17) தமது குமாரனை நமக்காக கொடுத்த அவர், தமக்கு ஊழியம் செய்ய விரும்புகிறவர்களுக்கு தேவையானதை அளிக்க தயாராயிருக்கிறார்.

இந்த இருதய மனப்பான்மையே இடைவிடாமல் ஜெபிப்பதாகும். சில சமயங்களில் இந்த எண்ணம் நமது சிந்தைகளில் ஒரு கனம் வந்தாலும், அது நமக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும். தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பாருடன் தேவன் கொண்டுள்ள செயல் தொடர்புகள் எல்லாம் அவர்களது முன்னேற்றத்திற்காகவேயாகும். இந்த முன்னேற்றத்தின் ஒரு அம்சம் நமது ஆசீர்வாதங்கள் எங்கிருந்து வருகிறது என்பதையும் தேவனே அதை நமக்கு வழங்குகிறார் என்பதையும் அறிந்து கொள்ளுவதாகும், மேலும் “உத்தமனாய் நடக்கிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது.”

R4892

# SONGS IN THE NIGHT

# இரவின் கீதங்கள்

சங்கீதம் 85

“கர்த்தர் நமக்கு பெரிய காரியங்களைச் செய்தார்; இதனிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம்.” சங்கீதம் 126:3

நாம் இன்னும் அழுகையின் இரவில் தான் இருக்கிறோம். வியாதி, வருத்தம், தவிப்பு மற்றும் மரணம் தொடர்கிறது. இது மேசியாவின் ராஜ்யத்தின் மகிமையான காலை வரை தொடரும். அப்பொழுது பூமிக்கு மகிமையான மாற்றம் வரும் என்பதை நாம் அறிந்து கொண்டிருப்பதால் நாம் எவ்வளவு சந்தோஷம் அடைகிறோம்! தீர்க்கதரிசி தாவீது இந்த கருத்தைப் பற்றி கூறுவதாவது: “சாயங்காலத்திலே அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்.” (சங்கீதம் 30:5) இந்த கருத்தையே பரிசுத்த பவுல் அறிவித்தார் “தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்கு சர்வ சிருஷ்டியும் ஏகமாய் தரித்து பிரசவ வேதனைப்படுகிறது.” (ரோமர் 8:22) மகிமையடைந்த தேவனுடைய புத்திரர் அவர்களது கர்த்தரோடு இணைந்து இம்மானுயேலின் ராஜ்யத்தை அமைப்பார்கள்.

தற்காலத்தில் தேவனுடைய இந்த புத்திரர் மனிதரிடையே அறியப்படாமல் அல்லது அங்கீகரிக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்கள் சொந்த ஜனங்களாக அடிக்கடி எண்ணப்படுகிறார்கள். ஏனெனில் அவர்கள் நீதி, சத்தியம் மற்றும் தேவனிடத்தில் வைராக்கியம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். “பிரியமானவர்களே, இப்பொழுது நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். இனி எவ்விதம் இருப்போம் என்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் வெளிப்படும் போது அவர் இருக்கிறவண்ணமாக நாம் அவரை தரிசிப்பதினால் நாம் அவருக்கு ஒப்பாயிருப்போம் என்று நாம் அறிந்திருக்கிறோம்.” நாம் அவரது கனம், மகிமை மற்றும் சாகாமையில் பங்கு பெற்று பூமியிலுள்ள சகல கோத்திரத்தாருக்கும் தெய்வீக ஆசீர்வாதங்களை வழங்குவோம்.

### “இரட்சணியப் பாடல்”

நமது பாடமாகிய 85ஆம் சங்கீதம் அநேக பிரயோகங்களை பெற்றிருக்கிறது. இவைகளில் முதலாவது இஸ்ரயேலர் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து விடுதலையடைவது. கோரேஸ் ராஜா விருப்பம் உள்ளவர்கள் பலஸ்தீனாவுக்கு திரும்பி செல்லலாம் என்று அனுமதித்த போது இது நடந்தது. ஐம்பத்தி மூவாயிரம் பேர் இந்த சலுகையை பயன்படுத்திக்கொண்டு அவனது உதவியையும்

பெற்றார்கள். தேவனுடைய கிருபையை இழந்து மறுபடியும் அவரது கிருபையையும் ஆசீர்வாதத்தையும் திரும்ப பெற்றதில் ஜனங்கள் களிகூர்ந்தார்கள். அவர்களது மீறுதல்கள் மன்னிக்கப்பட்டதற்கு தேவனுடைய சலுகை கிடைத்தது நிரூபணமாக இருந்தது.

கீதத்தின் இரண்டாவது பிரயோகம் நமக்கு முன்பாக இருக்கிறது. கடந்த பதினெட்டு நூற்றாண்டுகளாக இஸ்ரயேல் தேசம் கிறிஸ்தவ தேசங்களின் சிறையிருப்பில் இருந்திருக்கிறது. அது ஒரு பெரிய விடுதலையைக் குறித்து வாக்குத்தத்தை பெற்றிருக்கிறது. அவர்கள் சொல்லர்த்தமான பாபிலோனிலிருந்த பாலஸ்தீனாவுக்கு திரும்புவதற்கு விடுதலையைக் கொடுத்த கோரேஸ் ராஜா மகா மேசியாவுக்கு ஒரு முன்னடையாளமாக இருக்கிறான். மேசியா, தேவனுடைய பழங்கால ஜனங்கள் அவரது சலுகைக்கு திரும்புவதற்கு முழுமையான சுதந்தரத்தை கொடுக்க இருக்கிறார். இஸ்ரயேலுக்கு வரக்கூடிய இந்த விடுதலையை பரிசுத்த பவுல் ரோமர் 11:25-29இல் குறிப்பிடுகிறார். இரட்சகர் அவர்களை கூட்டிச் சேர்ப்பதற்கு மேலாக செய்வார். 85ஆம் சங்கீதம் கூறுகிறதைச் செய்வார். அப்போஸ்தலரும் இது குறித்து கூறுவதாவது: “அவர்களது பாவங்களை அவர்களை விட்டு நீக்கும் போது நான் அவர்களோடு செய்யும் உடன்படிக்கையாக இது இருக்கிறது.” (எபிரேயர் 8:8-11; எரேமியா 31:31-34)

உலகத்தின் பாவங்கள் இன்னும் நீக்கப்படாதிருக்கிறது போல இஸ்ரயேலின் பாவங்களும் இன்னும் நீக்கப்படவில்லை. மகா இரட்சகர் பாவங்களுக்காக உண்மையிலேயே மரித்திருக்கிறார். மேலும் அவர் பாவிகளுக்கு சிநேகிதராயிருக்கிறார். ஆனால் அவர் சபைக்காக, நமக்காக மட்டுமே தேவனுடைய பிரசன்னத்தில் தோன்றியிருக்கிறார். உலகத்திற்காக அல்ல. அவர் சபைக்கு மட்டுமே பரிகாரி. நீதியை சிநேகித்து அக்கிரமத்தை வெறுக்கிற, தேவனை நெருங்க விரும்புகிற இந்த பரிசுத்தவான்களுக்கு மட்டுமே அவர் பரிந்து பேசுவார்.

பாவம் மற்றும் மரணம் என்கிற இரண்டு ஏகாதிபத்தியத்திற்கு உலகமானது அடிமைப்பட்டிருக்கிறது. இப்பொழுது அவைகள் ஆண்டு மனுக்குலத்தை வேதனைப்படும்படி செய்கிறது. இந்த அடிமைத்தனத்தின் நிலைமையில் நாம் பிறந்தோம். வேதவாக்கியங்கள் கூறுகிறதாவது: “இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னை பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்.” நமது இனம் பலவீனங்களினால் வேதனைப்படுகிறது. இப்படியாக நாம் சுதந்தரித்திருக்கின்ற மனம் சார்ந்த, ஒழுக்கம் சார்ந்த மற்றும் உடல் சார்ந்த அபூரணங்களில் வேதனைப்படுகிறது; பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட விடுதலைக்காக ஏங்குகிறது. பெரும்பான்மையான மனுக்குலம் அவைகளின் அடிமைத்தனத்தை உணருகிறார்கள். விடுதலை அடைவதில் சந்தோஷப்படுவார்கள்.

மெய்யான கோரேஸ் மாபெரும் இரட்சகராக இருக்கிறார். அவர் சீக்கிரத்தில் வானத்தின் கீழெங்கும் ஜெயங்கொண்டு அவரது ராஜ்யத்தை ஸ்தாபிப்பார். சீக்கிரத்தில் சபை வகுப்பார் “தெரிந்துகொள்ளப்பட்ட” பரிசுத்தவான்கள் மகிமைப்படுத்தப்படுவார்கள். அதன்பிறகு தெரிந்து கொள்ளப்படாதவர்களின் ஆசீர்வாதத்திற்கான காலம் வரும். அதாவது மனுக்குலத்தின் பூரணத்திற்கும் உலகளாவிய சொர்க்கத்திற்குமான மறுசீரமைப்புக்கு வருவார்கள். இதை மேசியாவின் ராஜ்யமும் ஆற்றலும் ஏற்படுத்தும். எல்லா சத்துருக்களையும் தமது பாதத்திற்கு கீழாக்கிப் போடும் வரைக்கும் அவர் ஆளுகை செய்ய வேண்டியது. பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம். மரணம் அழிக்கப்படும்; ஷியோல், ஹேடஸ், பிரேதக்குழி மரித்தோரின் உயிர்தெழுதலினால் அழிக்கப்படும். “அவனவன் தன்தன் வரிசையில் உயிர்ப்பிக்கப்படுவான்.”

### “அவர் கொடுக்கிற இரவின் கீதங்கள்”

சர்வ சிருஷ்டியும் பாவம் மற்றும் துக்கத்தின் சுமையினால் வேதனைப்படும் போது, பரிசுத்தமான சிலர் இந்த வாழ்க்கையின் துக்கத்தின் மத்தியிலும் பாடவும் களிகூரவும் செய்வார்கள். இன்னும் அவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக அல்லது முழுவதுமாக பாவத்தின் பலன்களில் பங்கு பெற்றார்கள். அவர்களது சந்தோஷத்திற்கான இரகசியம் இரண்டு. (1) தேவனுடன் ஒப்புரவாகுதலை அவர்கள் அனுபவித்திருக்கிறார்கள். (2) அவர்கள் தங்களது சித்தத்தை தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். இந்த புதிய உறவை, இரட்சகர் மேல் வைத்த விசுவாசத்தினால், அவரது பாவநிவர்த்தி செய்கிற இரத்தத்தின் மேல் வைத்த விசுவாசத்தினால் அவர்கள் பெற்றார்கள். அவர்கள் தங்களால் முடிந்தவரை தெய்வீக சித்தத்தை செய்வோம் என்கிற உடன்படிக்கை மற்றும் தங்கள் சித்தங்களை அர்ப்பணித்தல் மூலமாக, தேவனிடம் “இடுக்கமான வாசல்” வழியாக “நெருக்கமான வழியில்” தேவனுடனான அர்ப்பணத்திற்குள் நுழைந்தார்கள்.

தேவனுடைய சித்தத்திற்கு இந்த அர்ப்பணமும், தங்களது வாழ்க்கையின் சகல காரியங்களும் தேவனிடத்தில் இருக்கிறது. அவரது மேற்பார்வையில் இருக்கிறது என்கிற உணர்வும் இருதயத்துக்கு இளைப்பாறுதலை தருகிறது. இந்த அர்ப்பண நிலைமையில் ஒரு சமாதானத்தையும் இளைப்பாறுதலையும் பெற்றிருக்கிறார்கள். தங்கள் இருதயத்தில் தேவனுக்கான மரியாதை மற்றும் தங்கள் வாழ்க்கையின் கீழ்ப்படிதலை அசட்டை செய்து தங்களது சொந்த விருப்பத்தை திருப்திபடுத்த நாடின போது இதை அவர்கள் அறியவில்லை.

அதே போல, தேவன் அவரது தெய்வீக நோக்கங்களின் அறிவை அவர்களுக்கு கொடுத்து, வரக்கூடிய காரியங்களை கவனிக்கிறடிபயால் இவர்கள் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் தேவனுக்கு நன்றியின் கீதங்களையும் பெற்றிருக்கிறார். இவர்கள் தற்கால சோதனைகள் மற்றும் துன்பங்களுக்கு அப்பால், தற்கால பாடுகளுக்கு பின்னர் வரும் மகிமைகளைக் காண்கிறார்கள். சகல தேசங்களிலும் சகல சபைகளிலும் இருக்கும் சில பரிசுத்தவான்களாகிய சபையானது தேவனுடைய எதிர்கால சுதந்தரர்கள்; இவர்கள் கனம், மகிமை மற்றும் சாகாமையின் சுதந்தரர்களாக இரட்சகருடன் இணைந்து அவரது மகிமையான ராஜ்யத்தில் இருப்பார்கள். இது அவர்களை உற்சாகப்படுத்துகிறது. மேலும் இவர் பூமியின் சகல கோத்திரங்களையும் ஆசீர்வதிக்கும் தெய்வீக திட்டத்தின் சுருக்கத்தையும் (Outlines) காண்கிறார்கள். தேவன் பரிசுத்தவான் அல்லாத அவருடையவர்கள் மற்றும் உலகத்தின் முழு மனுக்குலத்தின் மேலும், இவர்களில் சிலர் பரிசுத்தவான்களாக இருக்கிறவர்கள் மேல் பிரியமாயிருக்கிறார் என்பதை அவர்கள் உணரும் போது அது அவர்களை சந்தோஷப்படச் செய்கிறது. கிறிஸ்து மற்றும் மகிமையடைந்த சபை மூலமாக பூமியின் சகல கோத்திரத்தாரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதை அவர்கள் உணரும் போது, அது அவர்களை அவர்களது யாத்திரையின் வீட்டிலே மகிழச் செய்யும். அவர்கள் மானிட சுபாவத்திலிருந்து தெய்வீக சுபாவத்திற்கு தங்கள் சொந்த மாற்றத்திற்கு காத்திருக்கிறார்கள்.

R4892

## KING CYRES GOD'S SHEPHERD

# கோரேஸ் ராஜா தேவனுடைய மேய்ப்பன்

எஸ்றா 1:1-11; 2:64-70

"அவர் கிருபை செய்ய விரும்புகிறபடியால் அவர் என்றென்றைக்கும் கோபம் வையார்." மீகா 7:18

புறஜாதியார் தெய்வங்கள் எல்லாம் பழிவாங்கும் குணம் கொண்டவர்கள். வேதாகமத்தில் தேவன் மட்டுமே அன்புடையவராயிருக்கிறார் என்று சொல்லப்படுகிறது. 136ஆம் சங்கீதத்தில் "அவர் கிருபை என்றுமுள்ளது" என்று அநேகம் தடவை சொல்லப்பட்டிருக்கிறது. நீதி, ஞானம், அன்பு மற்றும் வல்லமையுள்ள நமது தேவனை எப்படி தவறாக உலகத்துக்கும் சபைக்கும் சித்தரிக்கிறார்கள். அவரது சிருஷ்டிகளில் பெரும்பாலானவர்களை நித்திய ஆக்கினையில் போடுவதில் சந்தோஷப்படுகிறவர் என்று கூறுகிறார்கள். இதுதான் அவரது ஏற்பாடாக இருக்குமானால், ஆரம்பத்திலிருந்து முடிவுவரை அவர் அறிந்திருப்பாரானால், அவர் அதில் பிரியப்படுகிறார், அவர்களது ஆக்கினையை நோக்கங்கொண்டார் என்பதை நிச்சயம் நிரூபிக்கும். ஆனால் தேவனுடைய வார்த்தையின் சரியான விளக்கத்திற்கு நமது கண்கள் திறக்கப்பட்ட போது, அவரது குணலட்சணம் எப்படி நமது கண்களுக்கு முன்பாக மகிமையடைந்து நமது அன்பையும் நமது பக்தியையும் கட்டளையிடுகிறது! அப்போஸ்தலர் அறிவிக்கிறது போல தெய்வீக அன்பே நம்மை விசுவாசத்துடனும் கீழ்ப்படிதலுடனும் இருக்கும்படி கட்டுப்படுத்துகிறது.

இன்றைய பாடமானது, இஸ்ரயேலர்கள் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, அவர்கள் பாலஸ்தீனாவுக்கு திரும்புதலைப் பற்றியது. இந்த திரும்பி வருதல் தீர்க்கதரிசி எரேமியா வாயினால் சொல்லப்பட்ட தேவனுடைய வார்த்தையின் சரியான நிறைவேறுதலாக இருந்தது. தீர்க்கதரிசி பட்டணத்தின் அழிவை மாத்திரமல்ல, ஜனங்கள் எழுபது வருடங்களுக்கு, பிறகு திரும்பி வருவதையும் சரியாக கூறினார். (எரேமியா 25:12; 2 நாளாகமம் 30:22,23)

மேலே குறிப்பிடப்பட்ட வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்படி நாங்கள் ஆலோசனை கூறுகிறோம். எருசலேம் பட்டணமும் அவர்கள் தேசமும் எழுபது வருடம் பழாக்கப்படும் என்பது முன்னரே கணிக்கப்பட்டது. சிலர் பட்டணத்தின் பாழ்க்கடிப்புக்கு இருபது வருடங்களுக்கு முன்னரே சிறைப்பட்டு போனார்கள். அநேகர் இதை எடுத்துக்கொண்டு எழுபது வருடங்களை கணக்கிடுகிறார்கள். இப்படியாக அந்த இருபது வருடங்கள் தனியாக இருக்கிறது. சரித்திர உண்மைகள் இந்த தவற்றின் மூலம் கட்டப்பட்டன. ஆகையால் அநேகர் வேதவாக்கியங்களுக்கு மாறான கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். வேதாகமம் அளவுகோலாக இருந்தால், அதன்படி நாம் நிற்க வேண்டும்.

இஸ்ரயேலர் பாபிலோனின் சிறையிருப்பிலிருந்து விடுதலையைச் சார்ந்த ஆச்சரியமான காரியங்களில் ஒன்றாக ஏசாயா தீர்க்கதரிசி முன்னரே கோரேஸை குறிப்பிட்டு, அவர் தேவனுடைய மேய்ப்பன் என்று அழைத்தது இருக்கிறது. "கோரேஸைக் குறித்து, அவன் என் மேய்ப்பன்; அவன் எருசலேமை நோக்கி; நீ கட்டுப்படு என்றும் தேவாலயத்தை நோக்கி: நீ அஸ்திபாரப்படு என்றும் சொல்லி, எனக்கு பிரியமானதையெல்லாம் நிறைவேற்றுவான்." (ஏசாயா 44:28) புனிதமற்ற உலக சரித்திரமானது கோரேசைப் பற்றி கூறுகிறதாவது: "கருணையுள்ளவன், கனிவானவன், நீதியுள்ளவன், மனிதர்களை மனிதனாக மதிப்பவன், மனிதர்களை வெறும் கருவிகளாக பயன்படுத்தவோ அவர்களை புறக்கணிக்கவோ மாட்டான். இதற்கு முன்பு உலகம் கண்டிருந்தவர்களைக் காட்டிலும் முற்றிலும் மாறான ஒரு வெற்றி வீரன்." புளூடார்க் என்ற கிரேக்க தத்துவ ஞானி கூறுகிறாதவது: "ஞானம், நற்குணம் மற்றும் பெருந்தன்மையில் எல்லா ராஜாக்களையும் மிஞ்சியவன்."

### கோரேஸ் ராஜாவின் புதிய முறைமை

மற்ற தேசங்களிலிருந்து ஜனங்களின் பிரதிநிதிகளை பாபிலோனுக்கு கொண்டு வந்து அவர்களை ஒரே மாதிரியாக மாற்றி அதில் சிறப்பானவர்களை தேர்ந்தெடுப்பது நேபுகாத் நேச்சாரின் அரசாங்க கொள்கை. ஆனால் கோரேஸ், பாபிலோனிய பேரரசை ஜெயங்கொண்டு அதிகாரத்துக்கு வந்த போது முன்னிருந்தவர்கள் கடைபிடித்த முறைமை திருப்திகரமாக இல்லை என்பதைக் கண்டான். கலப்படமான கல்தேய ஜனங்கள் தேசபக்தி இல்லாதிருந்தனர். கோரேஸ் உலகத்தை ஆளுகை செய்ய எதிர்மாறான திட்டத்தைக் கைக்கொண்டான். அவன் யூதர்கள் தங்கள் சொந்த நாட்டிற்கு திரும்ப அனுமதித்ததோடல்லாமல் அவர்களுக்கு உதவியும் செய்தான். பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட மற்ற தேசத்தார்களுக்கும் இதே போல செய்தான்.

யூதர்களுக்கு விடுதலையை அறிவித்து கோரேஸ் ராஜா கூறியவைகளின் சுருக்கம்: "பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் கூறியதாவது: பரலோகத்தின் தேவனாகிய யேகோவா பூமியின் ராஜ்யங்களையெல்லாம் எனக்குத் தந்தருளி, யூதாவிலுள்ள எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக் கட்டும்படி எனக்கு கட்டளையிட்டிருக்கிறார். அவருடைய ஜனங்கள் எல்லாரிலும் எவன் உங்களுக்குள் இருக்கிறானோ, அவனோடே அவன் தேவன் இருப்பாராக ; அவன் யூதாவிலுள்ள எருசலேமுக்கு போய் இஸ்ரயேலின் தேவனாகிய யேகோவாவுக்கு ஆலயத்தைக் கட்டக்கடவன். எருசலேமிலே வாசம் பண்ணுகிற தேவனே தேவன். அந்த ஜனங்களில் மீதியாயிருக்கிறவன் எவ்விடத்தில் தங்கியிருக்கிறானோ, அவ்விடத்து ஜனங்கள் எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்திற்கென்று அவனிடத்தில் உற்சாகமாய் காணிக்கை கொடுத்து அனுப்புகிறதுமன்றி, அவனுக்கு பொன், வெள்ளி முதலிய திரவியங்களையும், மிருக ஜீவன்களையும் கொடுத்து உதவி செய்ய வேண்டும்." கட்டுமான வேலைக்கும் ராஜா சுதந்திரம் கொடுத்து, பொக்கிஷதாரர் மூலமாக இஸ்ரலேயரிடம் கொடுத்தனுப்பிய ஆலயத்தின் பணிமுட்டுகள் சிறியதும் பெரியதுமாக மொத்தம் ஐயாயிரத்து நானூறு ஆகும்.

மரபு வழி சரித்திரம் கூறுகிறதாவது: இஸ்ரயேலர்கள் அரேபியா பாலைவனத்தில் பாதுகாப்புக்கு ஒரு ஆயிரம் வீரருடனான குதிரைப்படையுடன் ஏசாயா 48:20,21க்கு இசைவாக கம்பீர சத்தத்துடன் பாடல் பாடிக்கொண்டு சென்றார்கள். "பாபிலோனிலிருந்து புறப்படுங்கள்;

கல்தேயரை விட்டு ஓடி வாருங்கள்; கர்த்தர் தம்முடைய தாசனாகிய யாக்கோபை மீட்டுக்கொண்டார் என்று சொல்லுங்கள். இதை கெம்பீர சத்தமாய் கூறிப் பிரசித்தப்படுத்துங்கள், பூமியின் கடையாந்தரம் மட்டும் வெளிப்படுத்துங்கள்."

**தேவனுடைய சுத்திகரிக்கும் வார்த்தை**

இஸ்ரயேலர்கள் அவ்வப்போது விக்கிரகாராதனைக்குள் சென்றதைக் குறித்து நாம் வியப்படைந்தால், அவர்கள் மொத்தமாக அவ்வப்போது விக்கிரகாராதனையிலிருந்து, பாபிலோனிலிருந்து திரும்புவதைக் குறித்தும் நாம் வியப்படைவோம். இது அவர்களிடையே அறிப்படாமல் கூட இருந்தது. அவர்கள் பாபிலோன் ஆறுகள் அருகே உட்கார்ந்து பாழடைந்த நிலையில் "சீயோனை நினைத்துக் அழுதார்கள்." அவர்கள் தேவனுடைய சுதந்தரராக இருந்த போது தேவன் அவர்களுக்கு அளித்திருந்த கிருபையான வாக்குத்தத்தத்தைக் குறித்து அவர்களது எண்ணங்கள் பின்னோக்கி பயணித்தது. பிறகு விடுதலைக்கான நம்பிக்கை இரட்சகரிடம் ஜெபத்தில் கொண்டு சென்றது. சிறையிருப்பின் விளைவு சிறப்பானதாக இருந்தது. கோரேஸ் ராஜா அளித்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டவர்கள் கர்த்தரை கனப்படுத்தி அவரது வாக்குத்தத்தில் நம்பிக்கை கொண்டார்கள். திரும்பி வந்த மொத்த ஜனங்களும் எருசேலம் நகரத்தில் குடியேறினார்கள். (நேபுகாத் நேச்சார் நகரத்தை பாழாக்கிய போது சிதறடிக்கப்பட்டவர்கள் இன்னும் அதிகமானவர்கள்) ஐம்பதியாயரம் பேர் திரும்பி வந்தார்கள்.

அந்தக் காலத்தைக் குறித்து பேராசிரியர் அடனே **(Addeney)** குறிப்பிட்டிருக்கிறதாவது: "யூதர்கள் இப்போது தங்களை ஒரு சபையாக அமைத்துக் கொண்டார்கள். அவர்களது தலைவர்களின் பிரதானமான அக்கறை அவர்களது மத வாழ்க்கை மற்றும் குணலட்சணத்தை அபிவிருத்தி செய்வது, பிரத்தியேகத் தன்மை என்கிற கொள்கை யூதாயிசத்தை பாதுகாத்தது. இது ஒரு கடுமையான மற்றும் சம்பிரதாயமான பிரயோகம். இது உலகத்திலிருந்து பிரிந்திருக்கும் கொள்கை, கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் இதை சபைக்கு கட்டளையாக கொடுத்தனர். அதை புறக்கணித்தால், ஒரு ஆறானது கரைகளை உடைத்துக்கொண்டு உப்பு நீர் ஏரி மற்றும் சதுப்பு நிலங்களில் பரவி கடைசியில் பாலைவன மணல் மூலம் விழுங்கப்படும்."

இந்த காலத்தைக் குறித்து **Dr.** பெலவுபெட் **(Dr. Peloubet)** கூறுகிறதாவது: "நாடு கடத்துதல் பிரிந்த இரண்டு ராஜ்யங்களின் பிரதிநிதிகளை ஒன்றாக கொண்டு வந்தது. இரண்டாக இருந்த ராஜ்யத்தை ஒன்றாக்கி, பன்னிரெண்டு கோத்திரங்களையும் இரும்பை உலையில் வெல்டிங் செய்வது போல இணைத்தது." இந்த இணைப்பை தேவன் எசேக்கியேல் 37:15-28இல் இரண்டு கோல்கள் மூலம் குறிப்பிடுகிறார். ஒரு கோலில் "யூதா" என்றும் இன்னொரு கோலில் "இஸ்ரயேல் புத்திரர் என்றும் எழுதப்பட்டது. இந்த இரண்டு கோல்களும் ஒன்றாக இணைக்கப்பட்டது. அவை உன் கையில் ஒன்றாகும்." இது ஜனங்களின் முன்னிலையில், இஸ்ரயேலர் நாடு கடத்தப்பட்டு கி.மு.722 இல் பாபிலோனுக்கு கொண்டு செல்லப்பட்டது காண்பிக்கப்பட்டது. அப்பொழுது சமாரியா அழிக்கப்பட்டு யூதாவின் கைதிகள் இணைந்தனர். "அவர்களை இஸ்ரயேலின் மலைகளாகிய தேசத்திலே ஒரே ஜாதியாக்குவேன்; ஒரே ராஜா அவர்கள் எல்லாருக்கும் ராஜாவாக இருப்பார்; இனி அவர்கள் இரண்டு ஜாதியாக இருப்பதில்லை; இனி அவர்கள் இரண்டு ஜாதிகளாக பிரிவதுமில்லை." இப்படியாக "காணாமல் போன பத்து கோத்திரம்" இல்லாமல் போனதை நாம் பார்க்கிறோம். அவர்களுக்கான தேடுதல் நடக்கிறது.

**R4894**

## THE SECOND TEMPLE'S FOUNDATION

## இரண்டாவது ஆலயத்தின் அஸ்திவாரம்

எஸ்றா 3:1-4;4

"அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசியுங்கள்." சங்கீதம்100:4

பாபிலோனிலிருந்து எருசலேமுக்கு பிரயாணம் செய்ய ஐந்து மாதங்கள் ஆகும். எஸ்றா, தனது சிறு கூட்டத்தோடு பிரயாணத்தை நான்கு மாதத்திற்குள் முடித்தார். சகல தோத்திரங்கள் மற்றும் சகல காலத்தின் ஜனங்களிலும் அடிமைகளாகிய இந்த கூட்டம் எவ்வளவு உற்சாசமாக இருந்திருக்க வேண்டும் என்பதை நினைத்துப் பார்க்க முடிகிறது. வயதான சிலர் தாங்கள் சிறுவயதில் பார்த்த அந்த தேசத்தையும் பட்டணத்தையும் நினைவு கூர்ந்தார்கள்.

தாங்கள் சேரும் இடம் வந்ததும் அது கோரமாக பாழடைந்து இருந்தைக் கண்டார்கள். எழுபது வருடங்களுக்கு முன்பு காலத்தின் சிதைக்கும் கை, நேபுகாத் நேச்சரின் ராணுவத்தின் அழிக்கும் தீயிக்கு ஒத்துழைத்தது. பட்டணத்தில் வாழ்வது இயலாதது. இருபது மைல் தூரத்தில் தேசத்தின் ஜனங்கள் சிதறிப்போகப் பண்ணப்பட்டார்கள். அவர்களது கவனம் முதலில் குடியிருக்க வீடுகளையும் ஒலிவ மரங்களையும் திராட்சை செடிகளையும் ஏற்படுத்தவும் சென்றது. அதன் பிறகு சீக்கிரத்தில் தேவனுக்கு முறையான ஆராதனை செய்ய அவர்களது மத மனோபாவம் ஆலயத்தைக் கட்டவும் தேவனுக்கு மறுபடியும் பிரியமான ஜனங்களாக இருக்கவும் விரும்பியது.

முதலாவது மோரியா மலையின் உச்சியில் ஒரு பலிபீடம் கட்டப்பட்டது. அது தான் ஆபிரகாம் தனது மகன் ஈசாக்கை பலி கொடுக்க சென்ற இடம்; சாலொமோனின ஆலயம் கட்டப்பட்டிருந்த இடமும் அது தான். தெய்வீக ஆராதனை ஆரம்பமானது. கூடாரப்பணடிகை ஏழாம் மாதத்தில் ஆசரிக்கப்பட்டது. அடுத்த வசந்த காலத்தில் ஆலயத்தை திரும்பக்கட்ட தாங்கள் தயாரானதை உணர்ந்து, அதற்கான அஸ்திவாரத்தைப் போட்டு ஆரம்பித்தார்கள். இந்த ஊழியத்தின் மூலம் ஜனங்கள் மெய்யான தேவனை ஆராதிப்பதற்கான உற்சாகம் கவனிக்கப்படுகிறது. அஸ்திவார விழா நடத்தப்பட்டது. ஜனங்கள் முழக்கமிட்டார்கள்; தேவனுடைய நற்குணத்தை நினைத்து மாறி மாறி அழுதார்கள்; தெய்வீக வாக்குத்தத்தங்களை தங்களுக்கு மறுபடியும் தரும்படி வேண்டினார்கள்.

சாலொமோனின் ஆதிகால ஆலயத்தைப் பற்றி அறிந்திருந்த, அந்த கூட்டத்தில் இருந்த வயதான சிலர், சாலொமோனின் ஆலயத்தைக் காட்டிலும் தாங்கள் கட்டுகிறது

எவ்வளவு குறைவான மகிமையுடையது என்று கூறி அழுதார்கள் என்று இது குறித்து நாம் வாசிக்கிறோம்.

ஜனங்கள் திரும்பி வந்தார்கள், கர்த்தருடைய ஆலயத்தைக் கட்ட ஆரம்பித்தார்கள் என்ற செய்தி அந்த தேசத்தின் ஜனங்களிடையே பரவியது. அவர்கள் சில காரியங்களில் இஸ்ரயேலுக்கு எதிரிகளாக இருந்தவர்கள். எனினும் அவர்கள் இப்போது இவர்களுடன் சேர்ந்து புதிய ஆலயத்தை கட்டுவதில் பங்கு பெற விரும்பினார்கள். இதைக் குறித்து அவர்கள் கூறியதாவது: "உங்களோடே கூட நாங்களும் கட்டுவோம்; உங்களைப் போல நாங்களும் உங்கள் தேவனை நாடுவோம்; இவ்விடத்திற்கு எங்களை வரப்பண்ணின அசீரியாவின் ராஜாவாகிய எசரத்தோன் நாட்கள் முதற்கொண்டு, அவருக்கு நாங்களும் பலியிட்டு வருகிறோம்."

எனினும் இந்த அன்பான வேண்டுகோள் மறுக்கப்பட்டது. அதற்கு பதிலாக, "எங்கள் தேவனுக்கு ஆலயத்தைக் கட்டுவதற்கு உங்களுக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை. பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் ராஜா எங்களுக்கு கட்டளையிட்டபடி, நாங்களே இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தருக்கு அதைக் கட்டுவோம்" என்று கூறினார்கள். ஆகையால் அந்த தேசத்து ஜனங்கள், யூதாவின் ஜனங்கள் அதைக் கட்ட தடை பண்ணவும், வேலையை தாமதம் பண்ணவும் முயற்சித்தார்கள். அவர்கள் ஆலோசனைக்காரருக்கு கைக்கூலி கொடுத்து இஸ்ரயேலின் யோசனையை அபத்தமாக்கும்படி முயற்சித்தார்கள். பெர்சியா ராஜாவாகிய கோரேசின் காலமுதல், அவனது மகன் கேம்பிகஸ் காலத்திலும், தரியு ராஜா தனது சிங்காசனத்திற்கு வரும் வரையிலும் இதை செய்தார்கள். தரியு ராஜா கோரேசின் ஆதிக்கொள்கையை கடைபிடித்து எருசலேமில் நடக்கும் வேலைக்கும் முழு அதிகாரம் கொடுத்தான்.

### சரியான வழி தேர்ந்தெடுக்கப்பட்டதா?

யூதர்கள் இந்த விஷயத்தில் குறுகிய மனப்பான்மையுடனும் அறிவீனத்துடனும் நடந்து கொண்டார்கள் என்று அநேகர் சொல்லியிருக்கிறார்கள்; ஆலயம் கட்டுவதில் அயராது ஒத்துழைப்பும் உதவியும் கிடைப்பதில் அவர்கள் சந்தோஷப்பட்டிருக்க வேண்டும்; தேவனை ஆராதிக்கும் ஏற்பாடுகளில் அவர்கள் ஊழியத்தின் ஆவியை பெற்றிருக்க வேண்டும்.

அப்படியில்லை என்று நாங்கள் பதிலளிக்கிறோம். தேவன் இஸ்ரயேலர்களோடு செயல்தொடர்பு கொண்டிருந்த நிபந்தனைகளையும் விதிமுறைகளையும் நாம் புரிந்து கொள்ளும் போது அவர்களது வழி ஒன்றே சரியான வழியாக இருந்தது. சகல தேசங்களையும் இஸ்ரயேலர்களாக ஆக்குவது அவர்களது வேலையல்ல. அவர்கள் ஒரே தேசமாக, தேவன் மோசே மூலமாக நியமனம் செய்திருந்த பலிகளையும், ஆராதனைகளையும் செய்யவும் நிலைநாட்டவும் தேவன் அவர்களை தெரிந்து கொண்டிருந்தார். மற்ற ஜனங்களை "தெரிந்து கொள்ளப்பட்டவர்களாக" கொண்டு வரவோ தெய்வீக பிரமாணத்தை மாற்றவோ அல்லது திருத்தவோ அவர்களுக்கு சுதந்திரம் கொடுக்கப்படவில்லை. வெளியாட்கள், இஸ்ரயேலர் அல்லாதவர்கள் இஸ்ரயேலராக மாறக ஒரு உண்மையான ஒரு முறை இருந்தது. மதம் மாறுதல் மூலமே அதை அடைய முடியும். அவர்கள் தங்களது சொந்த விருப்பங்களை துறந்து, யேகோவாவுக்கு அர்ப்பணம் செய்வதால் மட்டுமே, ஆபிரகாமின் சந்ததியினருக்கு மட்டுமே அருளப்பட்ட தெய்வீக வாக்குத்தத்தங்களுக்கு பங்குதாரராக ஆக முடியும். இதைத் தவிர வேறு வழியில்லை.

மற்ற மதத்திலிருந்து தங்களை விலக்கிக்கொண்டு, மற்ற ஜனங்களுடன் கலப்பு திருமணம் செய்யாதிருப்பதின் மூலம் அவர்களுக்கான தெய்வீக ஏற்பாடுகளை இன்னமும் யூதர்கள் கடைபிடித்து வருகின்றனர். இப்படியாக தேவன் அவர்களை மற்ற ஜனங்களிலிருந்து பிரித்து பாதுகாத்திருக்கிறார். ஏன் என்றும் அவர் நமக்கு சொல்லுகிறார். தெய்வீக திட்டத்தில் அவர்களுக்கென்று ஒரு பெரிய இடத்தை வைத்திருக்கிறார். தெரிந்து கொள்ளப்பட்ட சபை நிறைவடைந்து பரலோக தளத்தில் மகிமையடைந்த பிறகு, இஸ்ரயேலர்கள் மறுபடியும் தேவனுடைய ஜனங்களாக ஆவார்கள்; தேவனுடைய பிரதிநிதிகளாக பூமியில் இருப்பார்கள். சபையானது ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியையும் தேவனுடைய ராஜ்யத்தையும் அமைப்பார்கள்; மாம்சீக இஸ்ரயேலர்கள் பூமிக்குரிய ஆபிரகாமின் சந்ததியை அமைத்து, பூமிக்குரிய தேவனுடைய ராஜ்யத்தின் பிரதிநிதிகளாக இருப்பார்கள். இந்த இரு சந்ததிகளும் ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. "உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களை போலவும், கடற்கரை மணலைப் போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன்." இந்த ஆவிக்குரிய மற்றும் மாம்சீக சந்ததிகள் மூலமாக ஆயிரம் வருடங்கள் மேசியாவின் ஆளுகையின் கீழ் பொதுவான மனுக்குலத்தின் மேல் தேவனுடைய மறுசீரமைப்பின் ஆசீர்வாதம் சீக்கிரத்தில் பொழியும்.

### ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் கொள்கை

இதே கொள்கையே ஆவிக்குரிய இஸ்ரயேலர்களால் அனுசரிக்கப்பட வேண்டும். "தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்." இந்த ஆலயத்துக்கு வெளியிலிருந்து, அர்ப்பணம் பண்ணப்படாத கற்கள் தேவையில்லை. உலகமானது தனக்குரியதை கட்டிக்கொள்ளட்டும். சபையை கட்டுகிறவர் தேவனே. அது கிறிஸ்துவின் சரீரமாக, பரிசுத்த ஆவியின் ஆலயமாக இருக்கிறது. இந்த ஆலய கட்டிடத்தில் தேவனுடன் இணையும்படி அர்ப்பணம் பண்ணினவர்களை அவர் அனுமதிக்கிறார். பரிசுத்த யூதா கூறுவது போல, பரிசுத்தவான்கள் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின் கீழ், "மகா பரிசுத்த விசுவாசத்தின் மேல் தங்களை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்." (யூதா 20) இப்பொழுது முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கும் இந்த மாபெரும் வேலையில் உலகப்பிரகாரமான ஊழியர்களுக்கு எந்த இடமும் இல்லை.

இந்த காரியத்தை சரியாக கவனிக்கவில்லையென்றால் அளவிட முடியாத தீமையே விளையும். நம்முடைய பாடத்தில் உரைக்கப்பட்டபடி, இந்த உலகத்தின் பிள்ளைகளும் தேவனுடைய ராஜ்யத்தின் ஜனங்களும் அடிக்கடி சேர்வார்கள். அதனுடைய பலன் ஆவிக்குரிய காரியங்களில் அளவான உலக சிந்தையை கொடுக்கவும் உலகத்தனத்தை கொண்டு வருவதாக இருக்கும். ஆவிக்குரிய காரியங்களில் போதுமான அறிவு அவர்களுக்கு இருக்காது. "ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் ஆவிக்கேற்ற பிராகரமாக ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவும் மாட்டான்." (1கொரிந்தியர் 2:14)

R4894

## KNOWLEDGE NECESSARY TO GROWTH IN GRACE

# கிருபையில் வளர அறிவு தேவை

"பழைய மனுஷனையும் அவனது செய்கைகளையும் களைந்து போட்டு, தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்கள். " கொலோசெயர் 3:9,10

நமது வசனத்தில் "களைந்து போட்டு" என்கிற சொற்றொடருக்கு வெளியே போடுதல் என்கிற அர்த்தத்தில் இருக்கிறது. இதை விளக்குவதற்கு ஒரு மகா சபையை எடுத்துக்கொள்ளுவோம். அதிகாரத்தில் உள்ள கட்சி ஒரு ஓட்டினால் அதிகாரத்தை இழக்கிறது.அது மகா சபையிலிருந்து நீக்கப்படுகிறது என்று நாம் புரிந்து கொள்ளுவதில்லை. கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய கட்சி மற்ற கட்சிகளை மேற்கொள்ளுகிறது. அப்படிப்பட்ட மாற்றம் என்பது கொள்கைகளிலும் இருக்கும்.

ஆகையால் அதே போல, கிறிஸ்துவில் புது சிருஷ்டியாக, மேசியாவின் சரீர அங்கங்களாக ஆவதிலும் மாற்றம் இருக்கும். அநேக காரியங்களில் ஒரு தீவிர மாற்றம் இருக்கும். புதிய சித்தமானது எதை உண்ண வேண்டும், எதை அணிய வேண்டும் என்பதை ஒழுங்குப்படுத்த வேண்டும். உண்மையாகவே, நாம் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு, புது சிருஷ்டியாக ஆன பிறகு, அதுவே எல்லாவற்றையும் ஆளும் அதிகாரம் உடையதாக இருக்க வேண்டும். ஏனெனில் நாம் ஒரு புது தலைவரை தேர்ந்தெடுத்துள்ளோம். தலைமை ஸ்தானத்தில் மாற்றம் என்பது ஒரு உடனடியான வேலையாக இருக்கிறது. ஒரு காலத்தில் பிரச்சனையின் மறுபக்கத்தில் இருந்தோம். கடைசியில் நாம் ஆண்டவரின் பக்கம் வர தீர்மானித்து அவரை நாம் தலையாக ஏற்றுக்கொண்டோம். அந்த கணத்தில் மாம்சத்தின் சித்தத்தை நீக்கிவிட்டு புது சித்தத்தை அதிகாரத்தில் வைத்து மாற்றத்தை ஏற்றுக்கொண்டோம். பிறகு நாம் புது சிருஷ்டியானோம். ஆனால் நாம் குணலட்சணத்தில் அபிவிருத்தி அடையாதிருந்தோம்.

புதிய கட்சி அதிகாரத்திற்கு வரும் போது, அது உடனே எல்லாவற்றையும் ஒழுங்குப்படுத்த முடியாது. ஆனால் விரும்பிய மாற்றங்களை அதிகாரத்தின் மூலம் ஆணையிடுகிறது. அதே போல் தான் புது சிந்தையும் இருக்கிறது. அது படிப்படியாக மாற்றத்திற்கு மேல் மாற்றத்தை செய்கிறது. இப்படியாக புதுப்பித்தல் வேலை, மறுரூபமாகும் வேலை போய்க்கொண்டிருக்கிறது. புது சிந்தை, எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் கிரியைகளை கர்த்தரின் மேற்பார்வை மற்றும் இயக்கத்தின் கீழ் கொண்டு வந்து அதிகமான கட்டுப்பாட்டை பெறுகிறது. நாம் கர்த்தரை அதிகமாக அறிய வரும் போது அவரது சித்தத்தை அதிகமாக காண்கிறோம். அந்த நேரத்திலிருந்து காரியங்களை தெய்வீக கண்ணோட்டத்தில் அதிகமதிகமாக பாராட்டுகிறோம்; மேலும் நமது வாழ்க்கையின் ஒவ்வொரு வார்த்தை மற்றும் கிரியையும் ஒழுங்குப்படுத்த பார்க்கிறோம்.

அறிவின் மூலமாகவும், அறிவிலும் புது சிருஷ்டியானது புதுப்பிக்கப்படுகிறது அல்லது புத்துணர்வு அளிக்கப்படுகிறது. கட்டப்பட்டு பலப்படுத்தப்படுகிறது. இந்த உலகத்தின் ஞானம் தேவனுடைய பார்வையில் முட்டாள்தனமாக இருக்கிறது. பழைய சிந்தை இந்த உலகத்தின் ஞானத்தை பெற்றிருந்தது. புது சிருஷ்டி பெறுவது தேவனுடைய சிந்தை ஆகும். பல்வேறு ஆற்றல்களில் புது சிருஷ்டி அபிவிருத்தி அடைவது என்பது படிப்படியானதாக இருக்கிறது; அறிவை சார்ந்திருக்கிறது. புதிய சித்தத்துடன் அறிவானது பலமும் ஆற்றலும் அளிக்கும் சக்தியாக ஆகிறது. புது சிருஷ்டியானது தனது நோக்கத்தை நிறைவேற்ற சந்தர்ப்பத்தை காண்கிறது. இந்த அறிவானது பரத்திலிருந்து வருகிறதாயிருக்கிறது. அது வேதாகமத்தில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன என்பதை அறிவதல்ல; எவ்வளவு வசனங்களை நாம் மேற்கொள் காட்ட முடியும் என்பதல்ல. ஆனால் வாழ்க்கையில் தேவன் அளித்த அநேக கிருபைகளினால் தேவனைப் பற்றிய அப்படிப்பட்ட அறிவுக்கு வருதல், கீழ்ப்படிதலை உறுதிப்படுத்துவதற்கு அவருடைய சித்தம் நமக்கு வெளிப்படுத்துதலே போதுமானது. தேவன் கூறியிருக்கிறவைகளில் நாம் கவனம் செலுத்துகிறதற்கேற்ப நமது அறிவு அதிகரிக்கிறது. பூமிக்குரியவைகளில் அன்பு செலுத்தாமல் பரத்துக்குரியவைகளில் நாம் அன்பு செலுத்துகிறதற்கேற்ப நமது அறிவு அதிகரிக்கிறது.

### நாம் அழைக்கப்படுதவற்கான நிபந்தனைகள்

எந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்கீழ் "தேவன் அழைத்திருக்கிறார்" என்பதை அனைத்து கிறிஸ்துவர்களும் அறிய வேண்டும். அவையாவன: (1) தற்காலத்தில் கிறிஸ்துவோடு கூட பாடுபட வேண்டும். (2) வருங்காலத்தில் உலகை ஆசீர்வதிக்க மகிமைப்படுத்தப்பட்டு அவரோடு ஆளுகை செய்ய வேண்டும். அவர்கள் பாடுபடுவதற்கான இரண்டு காரணங்களையும் அவர்கள் அறிய வேண்டும். தேவன் அவர்களில் குணலட்சணத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும். அது இல்லாமல் அவர்கள் "ராஜ்யத்திற்கு தகுதியுள்ளவர்களாக" ஆக முடியாது. "தங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்துகிறவர்களுக்கு" இந்த குணலட்சணங்களை அணிந்து கொள்ளுவது அவசியம். இவைகளில் சிலவற்றை நாம் கவனிக்கலாம்.

"அன்பு மாயமற்றதாக இருப்பதாக" பரிசுத்த பவுல் அன்பின் அவசியத்தைக் குறித்து முன்னரே விளக்கியிருக்கிறார். ஆனால் இப்போது அவர் பாசாங்கான அன்பிற்கு எதிராக நம்மை எச்சரிக்கிறார். அது வெறும் வெளியரங்கமான அன்பையும் பண்பையும் மட்டுமே குறிக்கும். உண்மையான அன்பின் ஆவி, பரிசுத்த ஆவி, மாயமான ஒன்றாக, பாசாங்கான ஒன்றாக இருக்காது. அன்பு என்பது உண்மையானதாக இருதயப்பூர்வமானதாக, வாயினால் வெளிப்படுத்துக்கூடியதாக இருக்கிறது. இந்த அன்பு தேவனிடத்திலும் எல்லாரிடத்திலும் அவர்களது தெய்வ பக்தி அல்லது அதற்கான அவர்களது முயற்சிக்கு தக்கதாக இருக்க வேண்டும். அது நல்ல சரியான, பரிசுத்தமான, உண்மையான அன்பாக இருக்க வேண்டும்.

"தீமையை வெறுத்துவிடுங்கள்." நாம் தீமை செய்வதை தவிர்ப்பது மாத்திரமல்ல, தீமையை நேசிக்காமல் இருப்பது மாத்திரமல்ல, இதைக்காட்டிலும் மேலாக தீமையை நாம் வெறுக்க வேண்டும். தேவன் மற்றும் எல்லார் மேலுள்ள அன்பானது சுத்தமானதாகவும் உண்மையானதாகவும் இருக்க வேண்டும். நீதியை செய்வது வளர்க்கப்பட வேண்டும். அதே போல பாவத்தை வெறுப்பதும் அனைத்து வகையான அசுத்தங்களை வெறுப்பதும் வளர்க்கப்பட வேண்டும். இப்படியாக கிறிஸ்துவ குணலட்சணங்களில் நாம் பலம் பெறுவதால் நல்லவைகளுக்கான, பரிசுத்தமானவைகளுக்கான, உண்மையானவைகளுக்கான நமது அன்பு மிகவும் தீவிரமடைகிறது. உண்மையற்ற,

அசுத்தமான, பாவமுள்ளவைகளுக்கான நமது எதிர்ப்பு தீவிரமாக இருக்கும். இந்த பரலோக கிருபையாகிய அன்பின் அழகான இணக்கங்களை நாம் அதிகமாக கற்றுக்கொள்ளும் போது, அவை நமது இருதயத்தின் அதிகமான மெல்லிசைகளாகின்றன. பாவமும் சுயநலமும், "உலகத்தின் ஆவியும்" நமக்கு அதிக வருத்தமளிப்பதாகவும் வெறுக்கத்தக்கதாகவும் ஆகின்றன.

பரிசுத்தமும் பாவமும் எதிராக இருப்பது போல இவைகளைப் பற்றிய நமது உணர்வும், அன்பு மற்றும் வெறுப்பின் உணர்வுகளால் குறிப்பிடப்பட வேண்டும். நீதிக்கான அன்பின் வளர்ச்சியில் குளிரடைவது பாவத்திற்கான வெறுப்பும் குறைவானதாக இருக்கிறது. ஆகையால் நாம், பாவம், சுயநலம், அசுத்தம் மற்றும் தீமையான சகல வழிகளின்மேல் வெறுப்பை வளர்ப்போமாக. அதன் மூலம் ஆவியின் அழகான கிருபைகளை நமது இருதயங்களில் வளர்ப்பது சுலபமாக இருக்கும்.

பழையவைகள் ஒழிந்து போவதும் எல்லாம் புதிதாவதும் நமது சிந்தைகளிலும் மட்டுமே. உண்மையிலேயே இந்த மாற்றம் நாம் ஆவியின் ஜீவிகளாக ஆகும் போது தான் நிறைவேறும். இதற்கிடையில் நாம் முதலாம் உயிர்த்தெழுதலுக்கு தகுதியுள்ளவர்களாக எண்ணப்பட்டால் கர்த்தர் நாம் எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறாரோ அப்படியே இருக்கும்படியான நமது மனதின் விருப்பத்தை, நமது உண்மையான ஆசையை நிரூபிப்பது நம்மிடம் தேவைப்படுகிறது. இதை கர்த்தரிடம் விளங்கப் பண்ணுவதற்கோ நிரூபிப்பதற்கோ நமது இருதயங்களையும் எண்ணங்களையம் நாம் தீவிரமாக கண்காணிப்பது மிகவும் அவசியமாக இருக்கிறது.

R4896

# FEEDING OF THE WORDS OF GOD
# தேவனுடைய வார்த்தைகளினால் போஷிப்பித்தல்

"மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான். " மத்தேயு 4:4

நமது கர்த்தர் வனாந்தரத்தில் நாற்பது நாட்கள் உபவாசம் இருந்த பிறகு அவரது பசியை போக்க, கற்களை அப்பங்களாக மாற்றும்படி எதிராளியாகிய சாத்தான் அவரிடம் கூறினபோது அவரது பதிலின் ஒரு பகுதியே இந்த தலைப்பு வசனம். பிதாவின் ஊழியத்திற்கென்று தம்மை அர்ப்பணம் செய்த பிறகு வந்த விசேஷித்த வல்லமையை தமக்காக பயன்படுத்துவது சட்டவிரோதமானது என்பதை கர்த்தர் அறிந்திருந்தார். அந்த வல்லமையை அவரது மாம்சீகத்திற்கு பயன்படுத்தக்கூடாது. ஆகையால் அவர் பசியாக இருந்தாலும் மாம்சீக திருப்திக்காக அவரது அந்த தெய்வீக வல்லமையை பயன்படுத்த மறுத்தார். உமது வல்லமையை நீர் பயன்படுத்தாமல் எப்படி உம்மால் ஜீவிக்க முடியும் என்று சாத்தான் கேட்டான். அதற்கு நமது ஆண்டவர், மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும், ஒவ்வொரு வாக்குத்தத்தத்தினாலும் பிழைப்பான் என்று ஆண்டவர் பதிலாக கூறியதை நாம் பார்க்கிறோம்.

நித்திய ஜீவனில் நமது நம்பிக்கை தேவனுக்கு கீழ்ப்படிவதில் இருக்கிறது. தேவனுடைய ஏற்பாட்டின்படி அது நம்மை நித்திய ஜீவனுக்கு உரிமையுள்ளவர்களாக்கும். நமது கர்த்தர் தமது பசியை போக்குவதின் மூலம் தமது மாம்சத்தை சந்தோஷப்படுத்தியிருக்கலாம். ஆனால் தேவனுக்கு கீழ்ப்படிகிற அவரது உடன்படிக்கையை மீறியிருப்பார். நித்திய ஜீவனை பெறுகிறவர்கள், தேவனுடைய பிரமாணங்கள் அனைத்திற்கும், அவர் இயக்குகிற அனைத்திற்கும் கீழ்ப்படிய நாட வேண்டும். அவர் தேவதூதர்களுக்கு ஒரு பிரமாணமும், வேறொரு பிரமாணத்தை மனிதர்களுக்கும், மூன்றாவதை சபைக்கும் கொடுத்திருக்கலாம். தேவனுடைய ஒவ்வொரு கட்டளைக்கும் நம்மால் பூரணமாக கீழ்ப்படிய முடியாததை நாம் காண்பதால், தேவனுடைய ஒவ்வொரு வார்த்தைக்கும் பூரணமாக கீழ்ப்படிவதின் மூலம் நாம் நித்திய ஜீவனை பெற முடியும் என்று நம்பிக்கை கொள்ள முடியாது. தேவன் நம்மை அவருடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டிருந்தாலும், அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிதலின் ஆவியை பெற்றிருப்பதால் மட்டுமே நாம் நித்திய ஜீவன் மேல் நம்பிக்கை கொள்ள முடியும்.

கிறிஸ்துவின் பள்ளியில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களில் ஒன்று, "ஒருவனுக்கு திரளான ஆஸ்திகள் இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல" என்பதாகும். அதாவது உணவு, உடை முதலானவைகளை அபரிமிதமாக, முழுமையாக, திரளாக பெற்றிருந்தாலும் அவனது ஜீவன் தெய்வீக சித்தத்துக்கு முழுமையாக கீழ்ப்படிவதை சார்ந்தே இருக்கிறது. தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தைக்கும், ஒவ்வொரு எச்சரிக்கைக்கும், ஒவ்வொரு ஊக்கத்திற்கும், ஒவ்வொரு வாக்குத்தத்தத்திற்கும் கவனத்தை செலுத்துவது, தற்போது தேவன் தமது குமாரனுடைய ராஜ்யத்தில் உடன் சுதந்தரராக நித்திய ஜீவனுக்கு அழைக்கிறவர்களின் அபிவிருத்திக்கு அவசியமாயிருக்கிறது. நாம் கர்த்தராகிய இயேசுவின் சீஷர்களாக இருந்து, இந்த வசனத்தின் வார்த்தைகளை ஞாபகத்தில் வைத்து அவற்றின்படி நாம் அதிகமதிகமாக நடப்போமாக.

### தேவனுடைய வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையினாலும் ஜீவித்தல்

ஆனால் தேவனுடைய வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பது எப்படி சாத்தியமாகும்? இயேசு எந்த பொருளில் இதைக் கூறினார். எப்படி தேவனுடைய வார்த்தை ஜீவனை கொடுக்கக்கூடும்?

நித்திய ஜீவனை அடையும் எல்லா நம்பிக்கையும் தேவனை சார்ந்ததே, தெய்வீக திட்டம் மற்றும் அதன் வாக்குத்தத்தங்களை சார்ந்தே இருக்கிறது என்று இயேசு கூறினார். இந்த வாக்குத்தத்தங்களை பார்த்து, உலகத் தோற்றத்திற்கு முன்பே தெய்வீக திட்டமானது, தேவனுடைய அனைத்து சிருஷ்டிகளும் அவரது சாயலின்படி சிருஷ்டிக்கப்பட்டன என்பதையும், விசுவாசம், அன்பு மற்றும் அவருக்கு இணக்கம் ஆகியவற்றில் நிலைத்து இருந்தால் நித்திய ஜீவனை பெறுவார்கள் என்பதையும் நாம் தெளிவாக காணலாம். நித்திய ஜீவனுக்கு நிபந்தனை கீழ்ப்படிதல் என்பதே தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது. நமது

வசனத்தில் உள்ள வார்த்தைகளை சொல்லும் போது இதுவே நமது கர்த்தரின் கருத்தாக சந்தேகத்திற்கிடமின்றி இருந்தது. மேலும், தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற ஒரு விசேஷித்த வேலைக்காக பூமிக்கு வந்தார் என்பதையும், தெய்வீக சித்தத்திற்கு அவரது பூரண கீழ்ப்படிதலே பிதாவுடன் கனம், மகிமை மற்றும் சாகாமையை பெற உறுதி பண்ணப்பட்டிருந்தது என்பதையும் அவர் ஆதியிலிருந்தே அறிந்திருந்தார். ஆனால் இறுதியில் ஏதாவது கீழ்ப்படியாமை இருந்தால் தேவ தயவு நீக்கப்பட்டு, கீழ்ப்படியாமைக்கு தண்டனையாக மரணமே கிடைக்கும்.

ஆகையால், பிதாவானவரின் சித்தத்திற்கு கீழ்ப்படியாமல், அவரது சரீர வாழ்வாதாரத்திற்காக அப்பத்தை உண்டாக்கி புசிப்பது பெரிய தவறு என்பதை நமது கர்த்தர் உடனடியாக தீர்மானித்தார். உணவு சில காலத்திற்கு மட்டுமே ஜீவனை அளிக்கும் என்பதையும், தேவனுடைய வார்த்தையில், தெய்வீக வாக்குத்தத்தத்தில் நம்பிக்கை வைப்பதே நல்லது என்பதையும் தீர்மானித்தார். பிதாவை நேசித்து, அவருக்கு ஊழியம் செய்து, கீழ்ப்படிகிறவர்களே முடிவில் முற்றிலும் ஜெயங்கொண்டவர்கள் தேவனுடைய நித்திய ஜீவனை பெறுவார்கள் என்பதையும் தீர்மானித்தார். நமது ஆண்டவரின் இந்த தீர்மானமே, அவரது சீஷர்களாக, அவரது அடிச்சுவட்டில் நடக்க நாடுகிற நமக்கு முழு போதனையாக இருக்கிறது.

**ஒழுங்கே புத்திரனுக்குரிய சான்று**

தேவனுடைய பிள்ளைகளுக்கு மிகவும் ஆறுதலாக இருக்கக்கூடிய "தேவனுடைய வார்த்தை" ஒன்றே அவரது பெற்றோருக்குரிய பராமரிப்பு மற்றும் ஒழுங்குக்கு உறுதி மொழியாக இருக்கிறது. "நீங்கள் சிட்சையை சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களை புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?" (எபிரேயர் 12:7) இந்த கூற்றில் சிட்சை என்ற வார்த்தை, தேவனுடைய அங்கீகாரம் இல்லை என்றோ, தனிப்பட்டவரின் பாவம் என்றோ அர்த்தங் கொள்ளாமல், அறிவுறுத்தல்கள் என்றே பொருள் கொள்ள வேண்டும். நமது கர்த்தர் பாவமில்லாதவராக, ஒரு குமாரனாக இருந்த போதும் பிதாவானவர் பல்வேறு சோதனைகள், கட்டுப்பாடுகள் போன்ற "பாத்திரம்" அவருக்கு ஊற்றப்பட்டது என்கிற எண்ணத்தால் இந்த காரியத்தில் நாம் வழிநடத்தப்படுகிறோம். இந்த அனுபவங்கள் அனைத்தும் பிரயோஜனமானது; பிதாவானவர் அவரை நேசித்ததை காண்பிக்கிறது. நமது கர்த்தர் செய்ய வேண்டும் என்று பிதாவானவர் விரும்பின காரியங்களை செய்ய, இந்த சில போதனைக்குரிய அறிவுத்தல்கள் மற்றும் அனுபவங்கள் இல்லாமல் அவர் தகுதி பெற்றிருக்கமாட்டார்.

சில கட்டுப்பாடுகள், சில தண்டனைகள் நம்முடைய சில சொந்த தவறுகளால் வருகிறது. இயற்கையான சில விளைவுகள் அந்த தவறுகளால் வருகின்றன. மன்னிப்பு கோருதல் மற்றும் இருதய வேதனைகள் அவைகளை அவசியமாக தொடர்கின்றன. இந்த அனுபவங்களிலிருந்து தேவன் நம்மை காத்துக்கொள்ள முடியும். ஆகையால் நாம் வேறுபடுத்திக் கொண்டு, நமது ஆசையை தூண்டுகிறவைகளிலிருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்டது அவரது திட்டமல்ல. இந்த அனுவங்களை நாம் பெற வேண்டும் என்றும் அதன் மூலம் சரியான வழியில் வழிநடத்தப்பட்டு, நமது சொந்த பலவீனங்களை கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் விரும்புகிறார்.

பல்வேறு சோதனைக்குரிய அனுபவங்கள் நமக்கு வரவில்லையென்றால், நாம் எதில் பலவீனமாக இருக்கிறோம் என்பதை அறியமுடியாது. இப்படியாக எங்கே நமது குணலட்சணத்தை பலப்படுத்த வேண்டும் என்பதையும் புது சிருஷ்டியாக நாம் எப்படி முழுமையாக அபிவிருத்தி அடையக்கூடும் என்பதையும் நாம் கற்றுக் கொள்ள முடியும். நமது கர்த்தராகிய இயேசு தமக்கு விரோதமாக "பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களை சகித்ததைக் குறித்து" வேத வாக்கியங்கள் கூறுகின்றன. (எபியேர் 12:3) நமக்கு வரக்கூடிய ஒவ்வொரு எதிர்ப்புகளையும் சந்திப்பதில், நமது சோதனைகள் அல்லது கட்டுப்பாடுகள் நம்மை நீதியில் திருந்தச் செய்ய வேண்டும். மேலும், சகோதரர்களுக்கோ அல்லது உலகத்தாருக்கோ உதாரணமாயிருக்கும்படி கர்த்தர் தமது பிள்ளைகளை விசித்திரமான சோதனைக்குள் வரும்படிச் செய்கிறார். காரணம் எதுவாக இருந்தாலும் அவைகளில் பெரும்பாலனவைகள் நமக்கு நீதியின் போதனையாகவும் நம்மை திருத்துவதற்காகவும் என்று நாம் புரிந்து கொள்ளுவோம்.

**நமது குணலட்சணத்தை பூரணப்படுத்துவதற்கு சோதனை, ஒழுங்கு அவசியம்**

சோதனை இல்லாமல் குணலட்சணத்தை அபிவிருத்தி பண்ண முடியாது. ஆரம்பத்தில் அது இளமையானதாக இருக்கும். அதற்கு தேவனுடைய அன்பாகிய சூரிய ஒளி அதிகமாக தேவைப்படுகிறது. அடிக்கடி அதற்கு அவருடைய கிருபையாகிய தண்ணீர் தேவை, விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலுக்கு ஒரு நல்ல அடிப்படையாக இருக்கும்படி அவரது குணலட்சணத்தைப் பற்றிய அறிவை நாம் உபயோகித்து நமது குணலட்சணத்தை வளர்க்க வேண்டும். இப்படியாக அது இந்த அனுகூலமான நிலைமைகளில் வளர்ந்த போது கிளைக்கழித்தல் போன்ற ஒழுங்குக்கு தயாராயிருந்து சில துன்பங்களை பொறுமையுடன் சகிக்க தயாராக இருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக குணலட்சணத்தின் பலம் அபிவிருத்தி அடையும் போது, அதற்கு பயன்படுத்தப்படும் சோதனைகள் தீவிரமடைகிறது. அது இன்னும் பலத்திலும் அழகு மற்றும் கிருபையிலும் முழுவதும் முழுமையான, நிலையான, இறுதியான அபிவிருத்தி அடையும் வரை பாடுகள் இருக்கும்.

குணலட்சணத்தை அபிவிருத்தி செய்து பயிற்றுவிக்கும் இந்த மகா பெரிய வேலை ஒரு பொதுவான மற்றும் கஷ்டமான வேலை. ஆனால் துன்பம் தருகின்ற ஒன்றல்ல. ஆனால் இப்படிப்பட்டவைகளை உறுதியான மற்றும் நீடித்த குணலட்சணத்தின் அபிவிருத்திக்கு அவசியம் என்று அப்போஸ்தலர் வெளிப்படையாக கூறுகிறார். உங்கள் சொந்த அனுபவம் இதை எப்படி சரிபார்த்தது என்பதையும் எப்படி நீங்கள் சில காலம் தேவனுடைய விசேஷித்த பராமரிப்பிலும் வழிநடத்துதலிலும் இருந்தீர்கள் என்பதையும் கவனியுங்கள். அனுபவ பாடங்கள் அனைத்திலும் நீங்கள் எவ்வளவு செல்வந்தனாயிருக்கிறீர்கள்! பொறுமை மற்றும் மற்ற ஆவியின் கனிகளிலும் உங்களை அந்த அனுபவங்கள் எப்படி அபிவிருத்தி செய்திருக்கிறது!

“எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாக காணாமல் துக்கமாய் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்” என்று அப்போஸ்தலர் கூறுவது போல நீங்களும் கூறலாம். (எபிரேயர் 12:11) அனுபவ பாடங்களும் ஒழுங்கும் உங்களை பலப்படுத்தியிருக்கிறது. அவைகள் உங்கள் விசுவாசத்தை பெருகச் செய்து உங்களை அந்நியோந்நியத்திலும் ஐக்கியத்திலும் கர்த்தரிடத்தில் நெருங்கச் செய்திருக்கிறது. அவை அவருடனான நல்ல பரிச்சயத்தையும் நம்மேல் அவரது கவனிப்பையும் அன்பையும் அக்கறையையும் அதிகமதிகமாக உணரச் செய்திருக்கின்றன. அதன்மூலம் ஒரு ஆழமான நன்றியுணர்வை விழிப்படையச் செய்து, அந்த நன்றியுணர்வு அதிகமான வைராக்கியத்தை வெளிப்படுத்துகிறது. இது தேவனுடனான ஐக்கிய உணர்வையும் ஆழப்படுத்துகிறது. இது கிறிஸ்து மூலமாக ஒரு குமாரனாக மற்றும் சுதந்தரராக இறுதியாக மற்றும் முழுமையாக அவரை ஏற்றுக்கொள்ளுகிற நம்பிக்கையை தருகிறது.

### கீழ்ப்படிதலுக்கான சோதனை

உதவிகரமான வேறொரு “தேவனுடைய வார்த்தை” 1யோவான் 2:5இல் காணப்படுகிறது. “அவருடைய வசனத்தை கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்.” புது சிருஷ்டியாக நமது அபிவிருத்தியை கண்டுபிடிக்கிறதற்கான ஒரு சோதனை நாம் இங்கே பெற்றிருக்கிறோம். தேவனுடைய வசனத்தைப் பெற்றிருக்கிறவர்கள் மட்டுமே அதை வைத்துக்கொள்ள முடியும் மற்றும் அதன் தேவைகளுக்கு இணங்கியிருக்க முடியும். தேவனுடைய வசனத்தை கைக்கொள்ளுவது ஒரு கஷ்டமான காரியம் என்று இந்த வசனம் கூறுகிறது. தேவனுடைய வசனம் நமக்கு வழங்குகிறதைக் காட்டிலும் உலகத்தையும் மாம்சத்தையும் ஏன் நாம் பிடித்துக்கொள்ள வேண்டும் என்பதற்கான அநேக காரணங்களை எல்லா பக்கங்களிலிருந்து நாம் கேட்கிறோம். “இடுக்கமான வழியிலிருந்து” நம்மை வழிவிலகச் செய்யும் அநேக கவர்ச்சிகள் இருக்கின்றன. ஆகையால் தேவனுடைய வசனத்தை பற்றிக்கொள்ளுகிற இவர்கள் “ஜெயங்கொண்டவர்கள்.”

நீதியாகவும் தேவ பக்தியுடனும் இந்த காலத்தில் வாழ்வதற்கு நமது ஜீவனையும் கொடுக்க வேண்டியிருக்கும் என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன. “கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.” (2 தீமோத்தேயு 3:12) தற்கால நிலைமைகளில் விசுவாசம் என்பது மரண பரியந்தமுமான விசுவாசம் என்று பொருள். தேவனிடத்தில் நமக்கு அன்பு இல்லையென்றால் அவருடைய வசனத்திற்கு நாம் கீழ்ப்படியமாட்டோம் என்று அறிவிக்கப்படுகிறோம். இல்லையென்றால் நாம் தேவனுடைய வார்த்தையை தக்கவைத்துக் கொள்ளமாட்டோம் அல்லது அதற்கு இசைவாக இருந்து மரணபரியந்தம் ஊழியம் செய்ய மாட்டோம்.

“தேவனே உமது சித்தத்தின்படி செய்ய வருகிறேன்” என்று நமது கர்த்தராகிய இயேசு கூறினபோது, தேவனுடைய் வார்த்தைக்கு பரிபூரண கீழ்ப்படிதலை அவர் விளக்குகிறார். எல்லாம் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. தேவனுடைய சித்தம் அனைத்தையும் எந்த விலை கொடுத்தாவது நிறைவேற்றுவதில் அவர் சந்தோஷப்பட்டார். பிதாவினிடத்தில் அவருக்கு அன்பு இராவிட்டால் தெய்வீக சித்தத்துக்கு கீழ்ப்படிகிற இந்த அளவை அடைந்திருக்கமாட்டார். நாமும் அவ்விதமாகவே இருக்க வேண்டும். தேவனிடத்திலும் நீதியின் கொள்கைகளிடத்திலும் நமக்கு அன்பு இராவிட்டால் இந்த வழியில் நம்மால் தொடர இயலாது.

அதன் விளைவாக, இவ்வளவாக தேவனிடத்தில் அன்பை செலுத்துகிறவர்கள் மட்டுமே, அவருடைய சித்தத்தை செய்ய தங்கள் ஜீவனையும் அர்ப்பணித்து அவரது வசனத்தை சரியாக கைக்கொள்ளுவார்கள். நாம் முதலில் அர்ப்பணம் செய்த போதே இந்த நிலைமையை அடைந்து விட்டோம் என்று நாம் கூறலாம். ஏனெனில் நமது இருதயம் தனது சித்தத்தை விட்டுவிட்டு முற்றிலுமாக கர்த்தருக்கு அர்ப்பணம் பண்ணிவிட்டது. அதாவது “எனது சித்தமல்ல, உமது சித்தத்தின்படியே ஆகக்கடவது.” சுய தியாகம் நிலைமைக்கு இணங்கி நடக்கிற அனைவரும் பூரண அன்பு என்கிற குறியீட்டை அடைந்திருக்கிறார்கள். உயிர்த்தெழுதலில் நாம் அடைவது பூரணத்தின் இன்னொரு உணர்வாக இருக்கிறது. தேவனுடைய வார்த்தையை மரண பரியந்தம் விசுவாசத்துடன் கைக்கொள்ளுகிறவர்கள் மட்டுமே பரிசை காத்துக்கொண்டு தெய்வீக சுபாவத்தில் பங்கடைவார்கள்.

கீழ்ப்படிதலே சோதனையாக இருக்கிறது. நாம் தேவனுடைய வசனத்தை சரியாக கைக்கொள்ளுகிற அளவுக்குத்தக்கதாக தேவன் மேலுள்ள அன்பும் நம்மில் பூரணமடைகிறது. ஏனெனில் நாம் கிறிஸ்துவின் சிந்தையை, பரிசுத்த ஆவியை, தேவனுடைய ஆவியை பெற்றிருந்தால், நமது திராணிக்குத் தக்கதாக அவரது நல்ல பிரியத்தின்படி சித்தங்கொண்டு அதை நிறைவேற்றுவோம். இந்த திராணி வருடா வருடம் தொடர்ந்து பெருக வேண்டும். நாம்

மறுரூபமாகி, புதிய உயிர்த்தெழுதலின் சரீரங்கள் கொடுக்கப்படும் வரை நாம் பூரணம் அடைவோம் என்பதில் நம்பிக்கை கொள்ளாவிட்டாலும், நாம் தொடர்ந்து கர்த்தருடன் ஐக்கியத்தில் இருக்கிறோம் என்கிற நமது மனதின் ஆவியில் அவருடன் நெருக்கமான தொடர்பை வைத்துக்கொள்ளலாம். நமது சரீரத்தில் பூரணமில்லை என்று நமது மாம்சத்தின் குறைகளை நாம் அங்கீகரித்தாலும் நமது தவறுகளை அனுதினமும் அறிக்கையிட்டு அவரது மன்னிப்பை நாடுவதின் மூலம் நமது பிரயாணத்தின் முடிவுவரை நாம் பாவத்திலிருந்து தூய்மையாக இருக்கலாம்.

### உயிர்த்தெழுதலின் வேலை

நமது உருவம் இன்னதென்றும், நாம் புழுதிக்கு ஒப்பாயிருக்கிறோம் என்றும் நாம் பலவீனர்கள், அபூரணர்கள், மரிக்கக்கூடியவர்கள் என்பதையும் தேவன் அறிவார் என்பதை அவரது வாயின் வார்த்தைகள் நமக்கு உறுதியளிக்கின்றன; நமது பரிபூரண சித்தமும் அபூரண சரீரமும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருப்பது தொடர வேண்டும் என்பது அவருடைய நோக்கமல்ல என்பதையும் ஆனால் அவர் உயிர்த்தெழுதலில் நமது புதிய சிந்தைகளுக்கேற்ப புதிய பரிபூரண சரீரங்களை வழங்குவார் என்பதையும் நமக்கு உறுதியளிக்கிறது.

இவை அனைத்தையும் செய்ய தேவன் திறமையும் விருப்பமும் உடையவராயிருக்கிறார் என்பதையும் அவரது தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு மானிடரைக் காட்டிலும் மிகவும் உயர்ந்த, மேலான, ஆவிக்குரிய சரீரங்களை அளிப்பது அவரது நோக்கமாக இருக்கிறது என்பதையும் அவர் உறுதியளிக்கிறார். இப்பொழுது நம்மால் முடிந்தவரை அவரது சித்தத்தை செய்ய விருப்பம் உடையவர்களாய் இருப்பதை காண்பிப்பதால், நாம் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெற்று, எல்லா வகைகளிலும் பிதாவானவரின் சித்தம் செய்ய திறமை உடையவர்களாய் இருப்போம். எப்படிப்பட்ட கிருபையான ஏற்பாடுகள்! எப்படிப்பட்ட மனதுருக்கமான ஆச்சரியமான வார்த்தைகள்! அது நித்திய ஜீவன் மற்றும் மகிமைக்கான ஆச்சரியமான நம்பிக்கைகளுக்கு நம்மை ஊக்குவிக்கிறது. இப்படியாக ஆவியிலும் விசுவாசத்திலும் ஜெயங்கொள்ளுகிறவர்களாக ஆக்கும். “நல்லது, உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே உன் எஜமானனுடைய சந்தோஷத்துக்குள் பிரவேசி” என்று அவருடைய கடைசி வார்த்தை அவருடைய வாயிலிருந்து வரும்.

“இன்னும் கொஞ்ச காலம், அவர் இப்போது வந்திருக்கிறார்;
நேரம் இடத்தை இழுக்கிறது…
நாம் அவரது முகத்தை பார்க்கும் போது
ஆசீர்வதிக்கப்பட்ட நேரம், மகிமையான காலை
நமது சோதனைகள் எவ்வளவு இலகுவாக காணப்படும்!
நமது யாத்திரை தூரம் எவ்வளவு குறைவாக இருக்கிறது!
நிலையற்ற கனவாகிய பூமியின் வாழ்வு
பகலின் விடியலில் விலகியது.”

R4898

## THE PEACE OF GOD
## தேவ சமாதானம்

“எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள் காத்துக்கொள்ளும்.” “உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறலில்லை.” பிலிப்பியர் 4:7; சங்கீதம் 119:165

தேவனுடைய பிரமாணம் தேவனுடைய சித்தத்தை குறித்துக் காட்டுகிறது. நல்ல சிந்தையுடைய, சரியாக தீர்மானம் உடையவர்கள் தேவனுடைய சித்தம் சரியாக செய்யப் பெற்றிருப்பார்கள். ஆரம்பத்தில் தேவனுடைய சித்தம் மனிதனுடைய சுபாவத்தில் எழுதப்பட்டிருந்தது. அங்கே பாவம் வந்த பிறகு, தேவன் அதை இஸ்ரயேலர்களுக்காக கற்பலகைகளில் எழுதினார். கிறிஸ்தவர்கள் இந்த பிரமாணங்களுக்கு முடிந்தவரை கீழ்ப்படிவது நீதியாக இருக்கிறது. தேவனுடைய சித்தத்தை செய்வதில் நாம் சந்தோஷம் அடைகிறோம்.

தேவனுடைய பிரமாணத்தை நேசிப்பது, அவர் ஒரு பெரிய திட்டத்தை (நோக்கத்தை) வைத்திருக்கிறார் என்பதை உணருதல்; தேவனுடைய சித்தம் என்ன என்பதை கண்டுபிடிப்பதில் சந்தோஷம் அடைதல்; அவருடைய அன்பு, ஞானம், நீதி மற்றும் வல்லமையில் முழு நம்பிக்கையும் வைத்தல் ஆகும். இப்படி செய்கிற அனைவரும் மாபெரும் சமாதானத்தை பெறுவார்கள். தெய்வீக நீதியின் செயல்பாடுகளை அவர்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள். ஆனால் தேவன் தவறு செய்ய முடியாதவர் என்பதில் முழு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இப்படியாக அவர்கள் அவர் மேல் விருப்பம் கொண்டு நம்பிக்கை வைப்பதில் சமாதானம் பெறுகிறார்கள்.

இந்த வசனத்தில் அப்போஸ்தலர் மனதிற்கும் இருதயத்துக்கும் உள்ள வேறுபாட்டை காண்பிக்கிறார். நாம் இந்த காரியங்களில் நல்ல உணர்வுகளை கொண்டிருக்க வேண்டியதோடு, நமது மனம் சமாதானத்தில் இருக்க வேண்டும். சில காரியங்களில் நாமே அர்ப்பணம் செய்த பிறகு, நாம் அவரிடமிருந்து பிரிக்கப்பட்டதாக உணர்வோம். நாம் கர்த்தரிடத்தில் நெருங்க வேண்டும் என்பதை நமது இருதயம் அறியும். மறுபடியும் நாம் நமது மனசாட்சிக்கு விரோதமாக எதையாவது செய்வோம். நாம் மறுபடியும் அவருடன் நல்லிணைத்துக்கு வருவதற்கு ஜெபத்தின் மூலம் முயற்சிக்க வேண்டும். இப்படியாக நாம் நல்லிணக்கத்தை அடைய வேண்டும். நமக்காக தேவன் ஒரு ஏற்பாட்டை செய்திருக்கிறார். நமக்காக ஒரு பரிகாரியை

கொடுத்திருக்கிறார். (1 யோவான் 2:1) நமக்காக முதல் தடவை தேவனுடைய சந்நிதானத்தில் தோன்றி அவரே, நமக்காக பரிந்து பேச என்றென்றைக்கும் ஜீவிக்கிறார். ஆகையால் அவர் செய்த ஏற்பாட்டின் மூலமாக நாம் கர்த்தரிடத்தில் வருகிறாம். ஏற்ற சமயத்தில் கிருபையையும் பெறுவதில் நாம் சந்தோஷம் அடைகிறமோம்.

வசனமானது நமது சொந்த சமாதானத்தை குறிப்பிடவில்லை. ஆனால் தேவனுடைய சமாதானத்தை குறிப்பிடுகிறது. தேவனுடைய வல்லமையை, அவரது நற்குணத்தை, நம்மை தமது பிள்ளைகளாக தமது வலது கையிலினால் பற்றிக்கொள்ள அவரது விருப்பத்தை உணருவதின் மூலம் சமாதானம் நமக்கு வருகிறது. இந்த சமாதானமானது விரோதமான அல்லது கவலை அளிக்கிற எண்ணம் அல்லது பயத்துக்கு எதிராக நம்மை தொடர்ந்து பாதுகாக்கிற ஒரு காவலாளியாக இருக்கிறது. அது இருதயத்தில் கர்த்தருடன் சமாதானம், ஐக்கியம் மற்றும் அந்நியோந்நியமாக இருக்கும்படி கிறிஸ்தவனின் மனதை வைக்கிறது. அது தெய்வீக சக்தி, ஞானம் மற்றும் அன்பு ஆகியவற்றை உறுதியளித்து அவனுக்கு போதித்து அவனது தர்க்க ரீதியான திறமையையும் மனதையும் பாதுகாக்கிறது.

கிருபை, ஞானம் மற்றும் ஆவியின் கனிகளாகவும், கர்த்தருக்கும் சகோதரருக்கும் ஊழியம் செய்யும் சந்தர்ப்பங்களுக்காகவும், தேவனுடைய பிரியமான குமாரனின் சாயலுக்குள் அதிகமதிகமாக வளர்வதற்காகவும் நாம் வேண்டுதல் செய்ய வேண்டும். இந்த நிலைமைகளின் கீழ், வாக்குத்தத்தம் பண்ணபட்ட "எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம்" நமது இருதயங்களையும் சிந்தைகளையும் காத்துக்கொள்ளும். சுயநலமும் லட்சியமும் இருதயங்களில் இடம் பெறாது. ஆழமான ஜலத்தில் இருக்கும் போது கூட தெய்வீக சமாதானம் நமது இருதயங்களில் இருந்து அவற்றைக் காத்துக்கொள்ளும்.

அப்போஸ்தலர் யாருக்கு கூறினாரோ அவர்கள், தேவனுடைய நிபந்தனைகளைக் ஏற்றுக்கொண்டதின் மூலம் அவருடன் நல்லிணத்திலிருக்கிறார்கள் என்பது அப்போஸ்தரின் கருத்தில் காணப்படுகிறது. சகல எதிர்ப்புகளிலிலுமிருந்து திரும்பி, அவர்கள் விசுவாசம், கீழ்ப்படிதல், சுயதியாகம் மற்றும் மரணம் வரையிலான அர்ப்பணம் ஆகியவற்றின் மூலம் அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறார்கள். தேவனுடைய சமாதானம் இவர்களில் இருந்து தொடர வேண்டும் என்று வற்புறுத்துகிறார். அவர்கள் அந்த சமாதானத்தினால் பாதுகாக்கப்பட வேண்டும். நமது மாபெரும் பரிகாரி மூலமாக இந்த சமாதானத்துக்குள் நாம் நுழைந்ததால், அவர் நமது பரிகாரியாக தொடர்ந்து இருப்பதின் மூலமே நாம் இந்த சமாதானத்தில் தொடர முடியும் என்று "கிறிஸ்து இயேசுவுக்குள்" என்ற சொற்றொடர் உரைக்கிறது. இல்லையென்றால், மாம்சத்தின அபூரணத்தினால் நல்லிணக்கத்தில் நாம் தொடர்ந்து இருக்க முடியாது.

"ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சாயஞ்செய்யும் கிருபையை அடையவும், தைரியமாக கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம்." (எபிரேயர் 4:16) இப்படியாக நாம் வந்து தினமும் "எங்களுக்கு எதிராக தப்பிதம் செய்தவர்களை நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் தப்பிதங்களை எங்களுக்கு மன்னியும்" என்று கேட்போமாக. நாம் சமாதானத்தில் நிலைத்திருப்போம்; ஏனெனில் நாம் இந்த மாபெரும் பரிகாரியை பெற்றிருக்கிறோம். ஆகையால் இந்த சமாதானம், மகா பரிகாரியின் மூலம் கிருபை தொடர்ந்து கிடைப்பதால் நிலைத்திருக்கிறது.

R4899

## THE SPIRIT OF DISCONTENT
## அதிருப்தியின் ஆவி

"கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்." ரோமர் 12:18

சகல மனிதர் மேலும் வரக்கூடிய சோதனைக்காலத்தைக் குறித்து வேத வாக்கியங்கள் கூறுகின்றன. (வெளிப்படுத்தல் 3:3,16) இந்தக் காலம் நம்மீது இருக்கிறது. முன்னரே ஆரம்பித்துவிட்டது என்று நாம் நம்புகிறோம். உலகத்துக்கு அது அதிருப்தி, கசப்பு, பொல்லாத யூகங்கள், பகைகள், சண்டைகள், களவு மற்றும் கொலை முதலானவைகளாக இருக்கிறது. இந்த உண்மையை வேத வாக்கியங்களானது தெளிவாக நிலை நாட்டுகின்றன.

இந்த சோதனைக்காலம் சில காரியங்களில் சபையாகிய நம்மிடத்தில் ஆரம்பித்து இருக்கிறது என்பதை நாம் மறவாதிருப்போமாக. தேவன் அதை அனுமதிக்கிறார். தேவன் தம்மைப்பற்றியும், தமது குணலட்சணம் மற்றும் அவரது மகிமையான திட்டங்கள் முதலானவைகளை குறித்தும் பெரிய வெளிச்சத்தை நமக்கு கொடுத்திருக்கிறார். தெய்வீக சுபாவத்துக்கான நமது பரம அழைப்பைக் குறித்தும் அவர் நமக்கு அறிவுறுத்தியிருக்கிறார். நாம் அவரது அழைப்பை ஏற்றுக்கொண்டு, அவருடைய பரிசுத்த ஆவியினால் நாம் ஜெனிப்பிக்கப்பட்டிருக்கிறோம். நாம் கிறிஸ்துவின் பள்ளியில் நுழைந்திருக்கிறோம். மணவாட்டி கூட்டத்தில் அங்கங்களாக நம் ஏற்றுக்கொள்ளப்படுவோமானால் நாம் அடைய வேண்டிய குணலட்சணத்திற்கான பாடங்களை நாம் பெற்றுக்கொண்டு வருகிறோம். எல்லா வகையிலும் ஆதாயம் நமக்கானதாக இருக்கிறது. இப்பொழுது பரீட்சையானது நடக்கிறது. நம்மில் யார் நன்மதிப்புடன் பட்டம் பெறுவோம்? மாம்சத்தில் பரம்பரையாக தரித்திரராகவும் அபூரணராகவும் இருந்தாலும் அவன் தம்முடைய இருதயம் மற்றும் மனதில் ஆண்டவரின் குணலட்சண சாயலை அடைந்திருக்கிறானா என்பதை அது காண்பிக்கும். இது தான் பரீட்சை.

இந்த சோதனை நமக்கு கொடுக்கப்படுவதை எப்படி நாம் எதிர்பார்க்கலாம்? மிகவும் பிரியமானவர்களே, அது நமக்கு கொடுக்கப்பட்டுக்கொண்டு இருக்கிறது. சோதனையானது சிலருக்கு சாதகமாகவும், மற்றவர்களுக்கு பாதகமாகவும் போய்க்கொண்டிருப்பதை நாம் உற்று நோக்குவதாலும் தொடர்பின் மூலமாகவும் நாம் உணருகிறோம். சில இடங்களில் வேத மாணவர்களின் முழு சபையும் ஈடுபட்டிருக்கிறதாக காணப்படுகிறது. அதிகாரம் மற்றும் முறைமைகளைப் பற்றிய அற்பமான கேள்விகள் திசை திருப்புதலையும் வாதங்களையும் எழும்பப்பண்ணுகிறது. இது சத்திய ஊழியத்திலிருந்து திசை திருப்புகிறது. அது சிலருடைய ஆர்வத்தை தணிக்கிறது. மற்றவர்களுக்கு தீய ஆவியின் கனிகளாகிய கசப்பு, கோபம், தீய எண்ணம், வெறுப்பு, மேட்டிமை, கருத்து வேறுபாடுகள், சண்டை ஆகியவற்றை ஏற்படுத்துகிறது. ஓரளவுக்கு கட்டுப்பாட்டை பெறுவதாக காணப்படுகிறது.

### ஒவ்வொருவரும் தன்னைத்தான் சோதிக்க வேண்டும்

நாம் யாரையும் நியாயம் தீர்க்கவோ கண்டனம் பண்ணவோ கூடாது. ஆனால் ஒவ்வொருவரும் தன்னைத்தானே சோதிக்க வேண்டும். அப்போஸ்தலர்

கூறுகிறார். அவன் ஆவியின் கிருபைகளாகிய தாழ்மை, தயவு, சாந்தம், பொறுமை, நீடிய பொறுமை, சகோதர அன்பு மற்றும் அன்பை பெற்றிருந்தால் மட்டும் போதாது. அவைகளை தனது நடத்தை மற்றும் வார்த்தைகளில் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். தேவனுடைய சோதனை, அழகு, நன்மை மற்றும் தயவுக்கான அன்பின் திசையில் மாத்திரமல்ல. பொறுமை, அன்பு ஆகியவற்றின் திசையிலும் தனிப்பட்டவர்கள் மற்றும் சத்துருக்களிடத்திலும் இருக்கும் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதைப்போல நீதியும் தெய்வீக குணலட்சணத்தின் ஆரம்ப அம்சமாக இருக்கிறது என்பதையும் நாம் மனதில் வைக்க வேண்டும். நாம் தேவனைப் போல, தேவனுடைய குமாரனின் சாயலை உடையவர்களாக இருப்போமானால், நீதியின் கொள்கைகள் நமது குணலட்சணத்தில் உறுதியாக நிலைநிறுத்தப்பட்டிருக்க வேண்டும். நாம் எல்லாரிடமும் பெருந்தன்மையும், இரக்கமும், அன்பும் உடையவர்களாக இருக்க வேண்டும். நாம் பெருந்தன்மை உடையவர்களாக இருப்பதற்கு முன்பே நாம் நீதியுள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் காண்கிற சகோதரனிடத்தில் அன்பு செலுத்தாவிட்டால் நாம் கண்டிராத பிதாவினிடத்தில் எப்படி அன்பை காண்பிப்போம்?

இதே அதிருப்தியின் ஆவி தேவனுடைய பிள்ளைகளை அவர்களது வீடுகளில் சோதிக்கிறது. சரி மற்றும் தவறு, நீதி மற்றும் அநீதியைப் பற்றி கூர்மையான உணர்வு இருக்குமானால், நாம் நீதியாக அல்லது அநீதியாக இருக்கிறோமா மற்றும் மற்றவர்கள் நம்மிடத்தில் நீதியாக அல்லது அநீதியாக இருக்கிறார்களா என்பதை நம்மை காணச் செய்கிறது. இந்த அதிகப்படியான அறிவு, கடந்த கால அநீதி ஏதாவது இருந்தால் சீக்கிரத்தில் முழுமையான இருதயப் பூர்வமான மன்னிப்பு கேட்கப்பட வேண்டும். இனி அது தவிர்க்கப்பட வேண்டும் என்கிற நம்மீதான பொறுப்பை கொண்டு வருகிறது. நம்மை நேராக்குதல் நமது அழியக்கூடிய சரீரத்தின் நடத்தை மற்றும் சிந்தனைகளை தெய்வீக தரநிலைக்கு கீழ் கொண்டு வரும். இந்த வேலையை முழுமையாக செய்தல் நம்மை முழுமையாக ஆக்கிரமிக்கும். இதை நாம் இப்பொழுது முழுமையாக பகுத்துணர்கிறோம்.

### நமது சொந்த குறைகளை பார்க்காத போக்கு

ஆனால் போக்கு எதிர் திசையில் இருக்கிறது. நமது குறைகளைக் கண்டு அதை சரி பண்ணாமல், மற்றவர்களின் குற்றங்களை கண்டுபிடித்து, நமக்கு செய்த அநீதிகளை கவனித்து, அதை அவர்கள் தீர்த்து நமது உரிமைகளை சீக்கிரத்தில் உணர்ந்து அதை சரிபண்ண வேண்டும், இல்லையென்றால் அதேபோல், தான் செய்ய வேண்டும் என்று பார்க்கிறார்கள். இது உலகத்தின் ஆவியாக இருக்கிறது. இது மகா ஆபத்தின் காலத்திற்கு விரைவாக துரிதப்படுத்துகிறது. அதிகாரத்தில் இருப்பவர்கள் படையை பயன்படுத்த வேண்டும் என்று உணருகிறார்கள். தொழிலாளர்கள் முற்காலத்தைப் போல இல்லாமல் தங்கள் சக்தியை உணருகிறார்கள். அதை செயல்படுத்த விரும்புகிறார்கள். அவர்கள் தங்கள் உரிமைகள் மற்றும் நீதிக்கான நம்பிக்கைகளை உலகின் மீது திணிக்க நினைக்கிறார்கள்.

பலவந்தமாக காரியங்களை மேற்கொள்ளாமல் கர்த்தருடைய வார்த்தையை கேட்கும்படி உலகத்தை நாம் வற்புறுத்துகிறோம். “அந்த நாள் மட்டும் எனக்கு காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.” ஆகையால் நாம் கிறிஸ்துவின் சபையை வற்புறுத்துகிறதாவது: புருஷர்களையும் மனைவிகளையும் பெற்றோர்களையும் மற்றும் குழந்தைகளையும் பரிபூரண நீதியின் வழிக்கு வற்புறுத்த முயலாதீர்கள். பரிவுடனும் தயவாயும் இருங்கள். தேவன் கூட பரிவுடனும் தயவாயும் நம்மிடமும் சகல மனுக்குலத்திடமும் இருக்கிறார். அநீதியானது சீக்கிரம் சரிபண்ணப்படாததற்கு காரணம் அது நீண்ட நாட்களாக இருப்பது அல்ல. மாறாக, தவறு செய்கிறவர்களின் குறையை காண்பிக்கவும், நம்மை எதிர்க்கிறவர்களுக்கு அன்பாகவும் சாந்தமாகவும் சத்தியத்தை கூற முயற்சிப்பது, நாம் நீண்ட நாட்கள் பாடுபட்டு, அன்பாக இருப்பதற்கு ஒரு காரணம்.

மனுக்குலத்தின் பாதிக்கு மேலானவர்கள் நீதியின் கொள்கைகளை மீறியும் அன்பின் கொள்கைகளுக்கு மாறாகவும் வாழ்கிறார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. சில சமயங்களில் கணவன் தனது மனைவியையும் பிள்ளைகளையும் நேசிக்கும் போது, அவர்களை தன்னிச்சையாக நடத்துவது அவரது அன்பையும் தயவையும் சந்தேகத்துக்குள்ளாக்குகிறது. கர்த்தருக்குள் சகோதரனின் அப்படிப்பட்ட வழி, தெய்வீக ஒழுங்கை தவறாக புரிந்து கொண்டதினால் இருக்கலாம். கணவனே குடும்பத்தின் தலைவர் என்று வேதாகமம் போதிக்கிறது என்பதை அவன் அறிவான். ஆனால் அவன் இந்த உயர்ந்த தலைமை ஸ்தானத்தை எப்படி சரியாக எடுத்துகொள்வது, பற்றிக் கொள்வது என்பதை அறிவானா? அநேகர், வாழ்க்கைக்குரிய தற்காலிக தேவைகளை கொடுப்பதுடன் குடும்பத்தின் அக்கறைக்கான காரியங்களில் முடிவு செய்யும் பொறுப்பான தலைவன் மட்டுமே என்ற நினைக்கிறார்கள். சரியாகப் பார்த்தால் மனிதனின் தலைமைப் பொறுப்பு இன்னும் அதிகமாக இருக்கிறது. தனது குடும்பத்தின் ஆரோக்கியம், சந்தோஷம், ஒழுக்கம் மற்றும் ஆவிக்குரிய ஆர்வம் ஆகியவைகளை கவனிப்பது அவனது கடமையாக இருக்கிறது. அவர்களது இயற்கையான அபூரணங்கள், பலவீனங்கள், மனநீதியாகவும் ஒழுக்க ரீதியாகவும் அதே போல சரீர பிரகாரமாக பலவீனங்கள் மற்றும் அபூரணங்களை கவனிப்பது ஆகும்.

### குடும்பத் தலைவரின் கடமைகள்

சந்தோஷமான குடும்பத்தின் உண்மையான தலைவன் அடிக்கடி தன் சொந்த விருப்பங்களையும் சுவைகளையும் அநேக காரியங்களில் பொருட்படுத்துவதில்லை. ஏனெனில் அவனது குடும்பத்தின் கடமைகளுக்கும் அவர்களது சந்தோஷங்களுக்கும் அது அவசியமாகிறது. வேத வாக்கியங்களின் நிலைப்பாட்டில் அவன் காரியங்களை தீர்மானிப்பவன், தலைவன் மற்றும் நீதிபதி என்பவைகளைக் காட்டிலும் இன்னும் அதிகமாக இருக்கிறது. இது வேதவாக்கிய அறிவிப்புகள் மற்றும் விளக்கங்கள் மூலம் நிரூபிக்கப்படுகிறது. அதில் கிறிஸ்துவும் சபையும் அவர்களது ஒருவருக்கொருவர் உறவு, கணவன் மற்றும் மனைவிக்கும் இடையேயான சரியான அன்பு, மரியாதை மற்றும் ஒத்துழைப்புக்கு மாதிரியாக ஆக்கப்பட்டிருக்கிறது.

நமது கர்த்தரே உண்மையிலேயே சபைக்குத் தலைவர். சபையாகிய நாம் இந்த தலைமையை அங்கீகரித்து அவரது

வழிகாட்டுதலை நாம் பின்பற்ற வேண்டும். அவற்றை ஞானமானதாகவும் உதவிகரமானதாவும் பலனுள்ளதாகவும் நாம் காண்கிறோம். அவற்றை எந்த அளவுக்கு நாம் பின்பற்றாமல் போகிறோமோ அந்த அளவுக்கு ஆசீர்வாதங்களை இழப்பதை பின்னர் காண்போம். நமது கர்த்தர் அவரது தலைமையை அங்கீகரிக்க சொல்லி நம்மை கட்டயப்படுத்துவதில்லை. நமது தேவை அதை கட்டாயப்படுத்துகிறது. ஆகையால் அது சரியாக ஒழுங்குப்படுத்தப்பட்ட குடும்பமாக இருக்க வேண்டும். கணவன் மற்றும் தகப்பனின் நடத்தை, பொதுவாக வற்புறுத்துதல், கட்டளையிடுதல் அல்லது பயமுறுத்தலைக் காட்டிலும், தன்னை நம்பியிருக்கிறவர்களுக்கு சுய தியாகம் அர்ப்பணம் செய்பவராக இருக்க வேண்டும்.

குடும்பத் தலைவன் தனக்கு கீழிருக்கிறவர்களுக்கு தனது அன்பையும் கவனிப்பையும் மெய்ப்பிபதற்கு, அதை அவர்கள் உணரும் முன்பு, நாட்கள் அல்லது வாரங்கள் அல்லது வருடங்கள் ஆகலாம். ஒரு வேளை அவனது முழு ஈடுபாடு தற்காலிக வாழ்க்கையில் உணரப்படாமலேயே போகலாம். குடும்பத் தலைவரின் ஈடுபாட்டை அவனது குடும்பத்தினர் கண்டுணர்கிறார்களோ இல்லையோ, ஒரு தகப்பன், கணவன், பொறுப்பாளர் முதலிய கடமைகள் முழுவதும் அவன் மேலேயே விழுகிறது. கர்த்தரைப் போலவே கணவனும் சாந்தம், தயவு, சலுகை முதலானவைகளை எப்பொதும் வெளிப்படுத்த வேண்டும்.

கர்த்தரின் பிரியமான சகோதரர்களில் சிலர் வேதாகம விளக்க உரையில் ஆறாவது தொகுதியில் உள்ள பகுதிகளை இந்த வழியில் தவறாக பொருள் கொண்டிருக்கிறார்கள் என்று வருத்தத்துடன் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அதன் பலனால் அவர்களது வாழ்க்கை கிருபையுடனும் அன்புடனும் இருப்பதற்கு பதிலாக தலைகீழாக, சர்வாதிகரமானதாக, பரிதாபகரமானதாக, கொடூரமானதாக ஆகிறது. இந்த அறிக்கைகள் மிகைப்படுத்தப்பட்டிருக்கலாம் என்று நம்புகிறோம். இந்த பொருளைப் பற்றி தெளிவான அறிவு சிலரை அவர்களது குடும்பத்தினரிடம் உயர்ந்தவர்களாக, விசுவாசமுள்ளவர்களாக, மதிப்பிற்குரியவர்களாக ஆக்கியிருக்கிறது என்று நம்புகிறோம்.

### "பெண்களின் உரிமைகள்" உணர்வுகள் காற்றில்

சகோதரிகளின் காரியங்கள் என்ன? கர்த்தர் நமக்கு மிகவும் சாதகமாக்கிய விலையேறப் பெற்ற சத்தியங்கள் சகோதரிகள் காரியத்தில் அப்பியாசப்படுத்தப்படவில்லை! நீதி மற்றும் அநீதி மனிதர்கள் மற்றும் ஸ்திரீகளுக்கான உரிமைகளைப் பற்றிய மாபெரும் அறிவு சகோதரிகளுக்கும் சகோதாரர்களுக்கும் சோதனைகளாக ஆகியிருக்கிறது. அவர்களும் கூட சோதனையில், பரீட்சையில் இருக்கிறார்கள். "பெண்களின் உரிமைகள்" உணர்வு காற்றில் இருக்கிறது. இது அமைதியையும், இணக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. மாறாக, அது அதிருப்தியின் ஆவியின் பொதுவான ஒழுங்காக இருக்கிறது. நமது மாபெரும் சத்துரு உலக ஆவியினால் இன்னும் அதிகமதிகமாக கலக்கிக் கொண்டிருக்கிறான். இது மகா ஆபத்தின் காலத்தை உலகத்தில் தூண்டி விடுகிறதைப் போல சபையிலும், குடும்பத்திலும் கிளறி விடுகிறான். உலகத்தின் மாபெரும் ஆபத்தை முன்கூட்டியே கொண்டு வருகிறது. சகோதர, சகோதரிகளே நமது சந்தோஷத்தையும் சமாதானத்தையும் மற்றவர்களது சந்தோஷத்தையும் சமாதானத்தையும் அழித்து சில உரிமைகளை பெறுவதால் நமக்கு என்ன லாபம்? நமது ஜீவியம் முழுவதும் மற்றவர்கள் சுகமாயிருக்க உதவி செய்வோம் என்று வாக்கு கொடுத்திருக்கிறோமே.

பரிசுத்த பவுல் கூறுவதாவது: "நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள். இந்த சுயாதீனத்தை மாம்சத்திற்கேதுவாக அனுசரியாதீர்கள்." நமக்கு ஆசீர்வாதத்தையும் ஆத்துமாவுக்கு தெய்வீக கிருபையையும் சமாதானத்தையும் கொண்டு வருகிற உண்மையான சுயாதீனம். தவறு மற்றும் மூடநம்பிக்கையிலிருந்து விடுதலை மற்றும் சுயநலத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுதலே ஆகும். அதாவது பலி கொடுக்க ஊழியம் பண்ண கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக சகோதர்களுக்கும் யாவருக்கும் ஜீவனை கொடுக்க சுயாதீனம். குறிப்பாக நாம் ஆண்டவரின் சாயலாக இருக்கிறோம். அவரது ஆவியாகிய, தன்னைத்தான் வெறுத்தல், அன்பு, தயவு, நல்ல கனிகளை உடையவர்களாக இருக்கிறோம் என்பதை பூமிக்குரிய உறவினர்களுக்கு காண்பிக்கக்கூடிய சுயாதீனம் அல்லது உரிமை.

சகோதரர்கள் மற்றும் சகோதரிகளுக்கு தேவனை ஆராதிக்க கொள்கைகளுக்காவும் சுயாதீனத்திற்காகவும் நிற்க வேண்டிய காலங்களும் இடங்களும் உண்மையிலேயே இருக்கின்றன. ஆனால் இவைகள் கொடுக்கப்பட்ட பிறகு, மற்ற அனைத்தையும் அற்பமாக நினைத்து நன்கு பலியிடலாம். இப்படிப்பட்டவைகளுக்கு மட்டுமே நமது இரசட்கர் போராடியது போல நாமும் போராட வேண்டும். இப்படியாக "அவர் நமகது மாதிரியை வைத்துப்போனபடி அவருடைய அடிச்சுவட்டில் நாம் நடப்போமாக." (1பேதுரு.2:21) ஆமென்.

---

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ.**C.T. ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.
வெளியிடுபவர் :
சகோ. **R. செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை,
எண். 22, முதல் தெரு, ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை - 600 019.
கைபேசி : 97909 00030. மின்னஞ்சல் : mbsaselvaraj@gmail.com
Website : www.thestudiesinthescriptures. com
**FOR PRIVATE CIRCULATION ONLY**